KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# Pendidikan Moral SJK(T)

Dokumen Standard Kurikulum dan Pentaksiran

## Tahun 6

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

## KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# Pendidikan Moral SJK(T)

## DOKUMEN STANDARD KURIKULUM DAN PENTAKSIRAN

# நன்னெறிக்கல்வி

# Tahun/ஆண்டு 6

கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு
ஜனவரி 2022

Terbitan 2022

© Kementerian Pendidikan Malaysia

Hak Cipta Terpelihara. Tidak dibenarkan mengeluar ulang mana-mana bahagian artikel, ilustrasi dan isi kandungan buku ini dalam apa juga bentuk dan dengan cara apa jua sama ada secara elektronik, fotokopi, mekanik, rakaman atau cara lain sebelum mendapat kebenaran bertulis daripada Pengarah, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia, Aras 4, 6-8, Blok E9, Parcel E, Kompleks Pentadbiran Kerajaan Persekutuan, 62604 Putrajaya.

# உள்ளடக்கம்

**பக்கம்**


| | |
|---|---|
| தேசியக் கோட்பாடு.......... | v |
| தேசியக் கல்வித் தத்துவம்.......... | vii |
| தேசியக் கலைத்திட்ட வரையறை.......... | ix |
| அணிந்துரை.......... | xi |
| முன்னுரை.......... | 1 |
| குறியிலக்கு.......... | 2 |
| நோக்கம்.......... | 2 |
| தொடக்கப்பள்ளிக்கான கலைத்திட்ட அமைப்பு.......... | 3 |
| கலைத்திட்டக் குவிவு.......... | 5 |
| 21-ஆம் நூற்றாண்டின் திறன்கள்.......... | 8 |
| உயர்நிலைச் சிந்தனைத்திறன்கள்.......... | 10 |
| கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்.......... | 11 |
| விரவிவரும் கூறுகள்.......... | 15 |
| வகுப்பறை மதிப்பீடு.......... | 18 |
| உள்ளடக்க அமைப்பு.......... | 21 |

**கருப்பொருள்: நானும் நாடும்** ........ 24

1.0 நாட்டின் வளப்பத்தை உருவாக்கும் இறை நம்பிக்கை........ 25

2.0 நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவு கொடுத்தல்........ 26

3.0 நாட்டின் குடிமகனின் கடமையுணர்வு........ 27

4.0 நாட்டைப் போற்றுதல்........ 28

5.0 நாட்டின் நற்பெயரை மேம்படுத்த உயர்வெண்ணம்........ 29

6.0 நாட்டின் அடையாளத்தை மதித்தல்........ 30

7.0 பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசத்தையும் அன்பையும் செலுத்துதல்........ 31

8.0 நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமை........ 32

9.0 சட்ட முறைமை மற்றும் நாட்டின் நற்பெயரை நிலை நிறுத்துவதில் துணிவு........ 33

10.0 நாட்டின் வளப்பத்தை உறுதிப்படுத்துவதில் நேர்மை மனப்பான்மை........ 34

11.0 நாட்டை மேலோங்கச் செய்வதில் ஊக்கமுடைமை........ 35

12.0 நாட்டின் நிலைத்தன்மைக்கு ஒத்துழைப்பு ........ 36

13.0 நாட்டின் தகைமையை உறுதிப்படுத்துவதற்கு மிதமான போக்கு........ 37

14.0 நாட்டிற்காக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை........ 38

உருவாக்கக்குழு........ 39

நன்றி மலர்கள் ........ 40

# RUKUN NEGARA

BAHAWASANYA Negara kita Malaysia mendukung cita-cita hendak:
Mencapai perpaduan yang lebih erat dalam kalangan seluruh masyarakatnya;
Memelihara satu cara hidup demokratik;
Mencipta satu masyarakat yang adil di mana kemakmuran negara
akan dapat dinikmati bersama secara adil dan saksama;
Menjamin satu cara yang liberal terhadap tradisi-tradisi
kebudayaannya yang kaya dan berbagai corak;
Membina satu masyarakat progresif yang akan menggunakan
sains dan teknologi moden;

MAKA KAMI, rakyat Malaysia, berikrar akan menumpukan seluruh tenaga dan usaha kami untuk mencapai cita-cita tersebut berdasarkan atas prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**
**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**
**KELUHURAN PERLEMBAGAAN**
**KEDAULATAN UNDANG-UNDANG**
**KESOPANAN DAN KESUSILAAN**

## தேசியக் கோட்பாடு

உறுதியாக, நம் மலேசிய நாடானது பின்வருவனவற்றை அடைய இலட்சியமாகக் கொண்டுள்ளது:
அனைத்துச் சமூகங்களுக்கிடையில் அணுக்கமான ஒற்றுமையை ஏற்படுத்துதல்;
ஒரே ஜனநாயக வாழ்க்கை முறையைப் பேணுதல்;
நாட்டின் சுபிட்சத்தை நியாயமாகவும் நடுநிலையாகவும் பகிர்ந்து கொள்ளும் சமுதாயத்தை உருவாக்குதல்;
பல்லின மக்களின் பல்வித பாரம்பரியமும் பண்பாடும் சுதந்திரமாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்;
அறிவியலையும் நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் முற்போக்கான சமுதாயத்தை உருவாக்குதல்;

ஆகையால், மலேசிய மக்களாகிய நாங்கள் மேற்கூறிய இலட்சியங்களை அடைய பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் எங்களின் முழுச் சக்தியையும் முயற்சியையும் ஒருங்கிணைத்துச் செயல்படுவோம் என உறுதிப் பிரமாணம் செய்கிறோம்:

**இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்**

**பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துதல்**

**அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்**

**சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்**

**நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்**

# FALSAFAH PENDIDIKAN KEBANGSAAN

“Pendidikan di Malaysia adalah suatu usaha berterusan ke arah memperkembangkan lagi potensi individu secara menyeluruh dan bersepadu untuk mewujudkan insan yang seimbang dan harmonis dari segi intelek, rohani, emosi dan jasmani berdasarkan kepercayaan dan kepatuhan kepada Tuhan. Usaha ini adalah bertujuan untuk melahirkan warganegara Malaysia yang berilmu pengetahuan, berketerampilan, berakhlak mulia, bertanggungjawab dan berkeupayaan mencapai kesejahteraan diri serta memberi sumbangan terhadap keharmonian dan kemakmuran keluarga, masyarakat dan negara.”

Sumber:Akta Pendidikan 1996 (Akta 550)

# தேசியக் கல்வித் தத்துவம்

“மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.”

மூலம்: கல்விச் சட்டம் 1996 (சட்டம் 550)

# DEFINISI KURIKULUM KEBANGSAAN

## 3. Kurikulum Kebangsaan

(1) Kurikulum Kebangsaan ialah suatu program pendidikan yang termasuk kurikulum dan kegiatan kokurikulum yang merangkumi semua pengetahuan, kemahiran, norma, nilai, unsur kebudayaan dan kepercayaan untuk membantu perkembangan seseorang murid dengan sepenuhnya dari segi jasmani, rohani, mental dan emosi serta untuk menanam dan mempertingkatkan nilai moral yang diingini dan untuk menyampaikan pengetahuan.

Sumber:Peraturan-Peraturan Pendidikan (Kurikulum Kebangsaan) 1997

[PU(A)531/97]

# தேசியக் கலைத்திட்ட வரையறை

**3. தேசியக் கலைத்திட்டம்**

(1) தேசியக் கலைத்திட்டம் என்பது அறிவு, திறன், நெறிமுறை, பண்பு, கலாச்சாரக்கூறுகள், நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய கலைத்திட்ட மற்றும் புறப்பாட நடவடிக்கைக்கான ஒரு கல்வித்திட்டமாகும். இத்திட்டம் மாணவர்கள் உடல், ஆன்மிகம், அறிவு, உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சியை முழுமையாகப் பெற்றிருக்க வகை செய்வதோடு மாணவர்களுக்கு வேண்டிய பண்புகளை விதைத்து அவற்றை மேம்படுத்தவும் அவர்கள் அறிவைப் பெறவும் வழிவகுக்கிறது.

மூலம்: கல்வி விதிமுறைகள் (தேசியக் கலைத்திட்டம்)1997

[PU(A)531/97]

## KATA PENGANTAR

Kurikulum Standard Sekolah Rendah (KSSR) yang dilaksanakan secara berperingkat mulai tahun 2011 telah disemak semula bagi memenuhi dasar baharu di bawah Pelan Pembangunan Pendidikan Malaysia (PPPM) 2013-2025 supaya kualiti kurikulum yang dilaksanakan di sekolah rendah setanding dengan standard antarabangsa. Kurikulum berasaskan standard yang menjadi amalan antarabangsa telah dijelmakan dalam KSSR menerusi penggubalan Dokumen Standard Kurikulum dan Pentaksiran (DSKP) untuk semua mata pelajaran yang mengandungi Standard Kandungan, Standard Pembelajaran dan Standard Prestasi.

Usaha memasukkan standard pentaksiran di dalam dokumen kurikulum telah mengubah lanskap sejarah sejak Kurikulum Kebangsaan dilaksanakan di bawah Sistem Pendidikan Kebangsaan. Menerusinya murid dapat ditaksir secara berterusan untuk mengenal pasti tahap penguasaannya dalam sesuatu mata pelajaran, serta membolehkan guru membuat tindakan susulan bagi mempertingkatkan pencapaian murid.

DSKP yang dihasilkan juga telah menyepadukan enam tunjang Kerangka KSSR, mengintegrasikan pengetahuan, kemahiran dan nilai, serta memasukkan secara eksplisit Kemahiran Abad Ke-21 dan Kemahiran Berfikir Aras Tinggi (KBAT). Penyepaduan tersebut dilakukan untuk melahirkan insan seimbang dan harmonis dari segi intelek, rohani, emosi dan jasmani sebagaimana tuntutan Falsafah Pendidikan Kebangsaan.

Bagi menjayakan pelaksanaan KSSR, pengajaran dan pembelajaran guru perlu memberi penekanan kepada KBAT dengan memberi fokus kepada pendekatan Pembelajaran Berasaskan Inkuiri dan Pembelajaran Berasaskan Projek, supaya murid dapat menguasai kemahiran yang diperlukan dalam abad ke-21.

Kementerian Pendidikan Malaysia merakamkan setinggi-tinggi penghargaan dan ucapan terima kasih kepada semua pihak yang terlibat dalam penggubalan KSSR. Semoga pelaksanaan KSSR akan mencapai hasrat dan matlamat Sistem Pendidikan Kebangsaan.

**HAJI AZMAN BIN HAJI ADNAN**
Pengarah
Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

**முன்னுரை**

நன்னெறிக்கல்வியானது மாணவர்களை உயர்நெறி மாந்தர்களாகவும் ஒழுக்கநெறியாளர்களாகவும் கற்பிக்கும் முயற்சியாகும். இதில் நன்னெறிச்சிந்தனை, நன்னெறியுணர்வு, நன்னெறி நடத்தை ஆகிய கூறுகள் வலியுறுத்தப்படுகின்றன. தனக்கும் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஆக்கத்தை வழங்க அறிவார்ந்த, நன்னடத்தையைக் கொண்ட, ஒருமைப்பாட்டை முன்னிலைப் படுத்தக்கூடிய, நாட்டுப்பற்றுமிக்க மாணவர்களை உருவாக்க இப் பாடம் துணை செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிரியர் கற்றல் கற்பித்தலைத் திட்டமிடவும் மதிப்பிடவும் ‘கலைத்திட்டத் தர ஆவணமும் மதிப்பீடும்’ எனும் இந்த ஆவணத்தைக் கட்டாயம் மேற்கோளாகக் கொள்ள வேண்டும். ஏனெனில், இப்பாடக் கலைத்திட்டம் அதன் மூலமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஈர்க்கும் வகையிலான கற்றல் கற்பித்தலை ஏற்படுத்த ஆசிரியர் கலைத்திட்டத் தர ஆவண மதிப்பீட்டைத் திறம்பட திட்டமிட வேண்டும். மேலும், இக்கலைத்திட்டத் தர ஆவணம், மதிப்பீடு ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ள அடைவுநிலைகளை மாணவர்கள் அடைவதை ஆசிரியர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

நன்னெறிக்கல்விக் கலைத்திட்டம் மாணவரின் ஆன்மிகத்தையும் நன்னடத்தையையும் வளர்த்தெடுக்கத் துணைசெய்கிறது. பல்வேறு சமயம், பாரம்பரியம், சடங்கு ஆகியவற்றிலுள்ள புரிதல், உய்த்துணர்தல், உலகநெறி போன்றவற்றை இக்கலைத்திட்டம் வலியுறுத்துகிறது. குடும்பம், பள்ளி, அண்டை அயலார், சமுதாயம், நாடு ஆகியவற்றின் மீது மாணவர்கள் நன்னெறிக்கடமை, சமுதாயக்கடமை போன்றவற்றை நிறைவேற்றி, தகுந்த முடிவு எடுக்கவும் செயல்படவும் இக்கலைத்திட்டம் மாணவர்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது.

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் சவால்களை மாணவர்கள் எதிர்கொள்வதற்கு இக்கலைத்திட்டத் தர ஆவணமும் மதிப்பீடும் அவர்கள் கொண்டிருக்க வேண்டிய நெறிகளை வலியுறுத்துகிறது. இந்நெறிகளின் ஆளுமை, நம்பிக்கையோடு ஏற்கும் மனநிலையையும் அன்றாட வாழ்வில் பொறுப்புணர்வையும் ஏற்படுத்த மாணவர்களுக்குத் துணைபுரிகிறது. மாணவர்கள் நன்னெறிக் கலைத்திட்டத்தின் குறியிலக்கை அடைய ஆசிரியர்களுக்குப் பல்வேறு கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் இவ்வாவணத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. நன்னெறிக்கல்வியின் கலைத்திட்டத் தர ஆவணமும் மதிப்பீடும் ஒருமைப்பாட்டின் நெறிகள், மாந்தரிடையே நல்லுறவு ஆகியவற்றின்மீது புரிந்துணர்வை ஏற்படுத்தி அதன்மூலம் வளப்பமான, நிலைத்தன்மைமிக்க குடிமக்களை உருவாக்க வலியுறுத்துகிறது.

**குறியிலக்கு**

நன்னெறிக்கல்விக் கலைத்திட்டத்தின் குறியிலக்கானது ஒழுக்க நெறியையும் நிறையுடைமையையும் கொண்ட உயர்நெறி மாந்தரை உருவாக்கி, அதன்வழி நாட்டிற்கும் உலகச் சமுதாயத்தினருக்கும் உலகநெறி அடிப்படையில் நன்னெறிக் கோட்பாட்டின்வழி நாடு, உலகச் சமுதாய ஒருமைப்பாட்டையும் வளப்பத்தையும் நிலைநாட்டப் பங்களிப்புச் செய்தலாகும்.

**நோக்கம்**

தொடக்கப்பள்ளிக்கான நன்னெறிக்கல்வித் தரக் கலைத்திட்டத்தின் வழி, மாணவர்கள் அடைய வேண்டிய நோக்கங்கள் பின்வருமாறு:


1. உலகளாவிய உயர்நெறிப்பண்புகளை அறிதல்; புரிதல்;
2. அன்றாட வாழ்வில் நல்ல பழக்க வழக்கங்களை உய்த்துணர்தல்; கடைப்பிடித்தல்;
3. தான், குடும்பம், பள்ளிக்கூடம், அண்டை அயலார், சமுதாயம், நாடு ஆகியவற்றின் நல்வாழ்வை நிலைநிறுத்த நன்னெறி, சமுதாயக்கடமையை நிறைவேற்றுதல்;
4. நன்னெறிச்சிந்தனை, நன்னெறியுணர்வு, நன்னெறி நடத்தை ஆகியவற்றை மேம்படுத்தி நன்னெறிக்கொள்கை அடிப்படையில் சமுதாய விதிகள், உலகநெறி ஆகியவற்றைக் கொண்டு ஒன்றைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவெடுத்தல்;
5. தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தச் சமுதாய நல்லுறவை வலுப்படுத்துதல்;
6. தான், குடும்பம், பள்ளி, அண்டை அயலார், சமுதாயம், நாடு, உலக சமுதாயம் ஆகியவற்றுக்கு நிறையுடைமையாகச் செயல்படுதல்.

**தொடக்கப்பள்ளிக்கான கலைத்திட்ட அமைப்பு**

தொடக்கப்பள்ளிக்கான கலைத்திட்டம் கீழ்க்கண்ட ஆறு உத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது:

i. தொடர்பு
ii. ஆன்மிகம், நடத்தை, பண்பு
iii. மனிதவியல்
iv. சுய சால்புடைமை
v. உடல் வளர்ச்சியும் முருகுணர்ச்சியும்
vi. அறிவியலும் தொழில்நுட்பமும்

குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வோர் உத்திரமும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளன. அவற்றோடு ஆய்வுச்சிந்தனை, ஆக்கச்சிந்தனை ஆகியவையும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைப்பு ஆன்மிகம், அறிவாற்றல், சுய சால்புடைமை, ஆய்வுச்சிந்தனை, ஆக்கச் சிந்தனை, புத்தாக்கச் சிந்தனை ஆகியவற்றைக் கொண்ட மனித மூலதனத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது (விளக்கப்படம் 1). நன்னெறிக் கல்வியின் கலைத்திட்டத்தை மேம்படுத்துவதில் இந்த ஆறு உத்திரங்களும் தொடக்கப்பள்ளிக்கான கலைத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.





**விளக்கப்படம் 1: தொடக்கப்பள்ளிக்கான கலைத்திட்ட அமைப்பு**

**கலைத்திட்டக் குவிவு**

தொடக்கப்பள்ளிக்கான நன்னெறிக்கல்வியின் முதன்மைக் குவிவு உயர்நெறி மாந்தரை உருவாக்குவதாகும். மாணவரிடையே நன்னெறிச்சிந்தனை, நன்னெறியுணர்வு, நன்னெறி நடத்தை ஆகிய முக்கூறுகள் உட்புகுத்தப்படுவதன்வழி உயர்நெறி மாந்தர் உருவாக்கப்படுவது மெய்யாகிறது.

நன்னெறிச்சிந்தனையின் வாயிலாக மாணவர்கள் செயற்படும் முன் சிந்திக்கும் ஆற்றலைப் பெறுவர். நன்னெறியுணர்வு மாணவர்கள் நன்னெறி நடத்தையில் ஈடுபட ஊக்கமூட்டுவதாக அமையும். இதன்வழி, மாணவர் ஒருவரின் நன்னடத்தை பண்புமிக்க மாந்தர் நிலையை நோக்கியதாக இருக்கும்.

இம்மூன்று கூறுகளும் மாணவர் ஒருவர் தொடர்ச்சியாகவும் ஏற்புடையதாகவும் மிகச் சரியாகவும் சீர்தூக்கிப் பார்க்கத் தூண்டுதலாக அமையும். உலக விதிமுறைகள், நெறிகள் அடிப்படையில் ஒரு நடவடிக்கை மேற்கொள்ள நன்னெறியைக் கட்டமைப்பதில் நன்னெறிச் சீர்தூக்கல் முதன்மைக் கூறாக அமைகிறது. விளக்கப்படம் 2 உயர்நெறி மாந்தரை உருவாக்குவதில் நன்னெறிச்சிந்தனை, நன்னெறியுணர்வு, நன்னெறி நடத்தை ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டுகிறது.




**விளக்கப்படம் 2: நன்னெறிச்சிந்தனை, நன்னெறி உணர்வு, நன்னெறி நடத்தை ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு**

கீழ்க்காணும் மூன்று கூறுகளையும் ஒருங்கிணைப்பதன் மூலம் நன்னெறிக்கல்வியின் குறியிலக்கில் எதிர்பார்க்கப்படுவது போல் உயர்நெறி மாந்தரை உருவாக்க இயலும்.

**நன்னெறிச்சிந்தனை**

நன்னெறிச்சிந்தனையானது நன்னடத்தை அல்லது தீய நடத்தை ஆகியவற்றை அடையாளங்காண்பதில் தெளிவற்ற சூழலில் அல்லது நெறிக்குழப்பத்தில் சீர்தூக்கும் சிந்தனையாற்றலைக் குறிப்பதாகும்.

**நன்னெறி உணர்வு**

நன்னெறியுணர்வானது தவறு செய்யும்போது குற்றவுணர்வு ஏற்படுவதும் நற்செயல் ஆற்றும்போது மகிழ்ச்சியடைவதுமாகும். மேலும், அது அக்கறையுணர்வையும் தெளிந்த உள்ளத்தையும் குறிக்கும் உணர்வு விழிப்பாகும். நன்னெறியுணர்வானது தன்னிடத்திலும் பிறரிடத்திலும் இயைபுணர்வையும் பரிவுணர்வையும் கொண்டு நன்னெறித் தன்னூக்கத்தையும் எண்ணத்தையும் வெளிப்படுத்துவதாகும்.

**நன்னெறி நடத்தை**

நன்னெறி நடத்தை என்பது நன்னெறிச்சிந்தனை, நன்னெறியுணர்வு ஆகியவற்றுடன் தொடர்புடைய நன்னெறி நடவடிக்கையாகும். அது பொறுப்புணர்வையும் நிறையுடைமையையும் தன்னார்வத்தோடு வெளிப்படுத்துவதாகும்.

நன்னெறிச் சிக்கல்களுக்கு மாணவர்கள் பகுத்தறிவான தீர்வு காண்பதற்கு இம்மூன்று நன்னெறிக் கூறுகளும் உலகநெறிகளோடு மேம்படுத்தப்பட வேண்டும். எனவே, இம்மூன்று கூறுகள், 14 உலக நெறிகளோடு நடைமுறைப்படுத்தப்படும்போது அவை உயர்நெறி பண்பாளரை உருவாக்க ஒரு கருவியாகப் பயன்படுகிறது. இந்த 14 உலகநெறிகள் மலேசியச் சமய, சமுதாய நம்பிக்கைகளுக்கு உட்பட்ட நன்னெறிகளாகும். தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே பண்புகளை விதைப்பதிலும் வளர்ப்பதிலும் ஏற்புடைய கற்றல் கற்பித்தலை ஆசிரியர்கள் தயார் செய்ய வேண்டும். அந்த நன்னெறிப்பண்புகள் அட்டவணை 1-இல் குறிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: தொடக்கப்பள்ளிகளுக்கான உலகநெறிகள்**

| நெறி | நெறியின் விளக்கம் |
|---|---|
| **இறைவன்மீது நம்பிக்கை வைத்தல்** | தேசியக் கோட்பாட்டின்படி இறைவன் உள்ளார் என்பதிலும் இவ்வுலகைப் படைத்தவர் என்பதிலும் உறுதி கொள்வதோடு அவரது எல்லாக் கட்டளைகளையும் தத்தம் சமயம் அல்லது நம்பிக்கைக்கு ஏற்றவாறு பின்பற்றுதல். |
| **நன்மனம்** | தன்னலம், பிறர்நலம் ஆகியவற்றை உணர்ந்து தேவையான உதவியையும் ஆதரவையையும் உளத்தூய்மையாக வழங்குதல். |
| **கடமையுணர்வு** | கொடுக்கப்பட்ட பொறுப்பு, கடமை ஆகியவற்றை ஏற்பதிலும் முழுமையாக ஆற்றுவதிலும் ஆற்றல் கொண்டிருத்தல். |
| **நன்றி நவில்தல்** | உணர்வு அல்லது செயல்வழி ஒப்புதல் வழங்குதல்; நன்றி பாராட்டுதல் |
| **உயர்வெண்ணம்** | பணிவையும் நன்னடத்தையையும் கடைப்பிடித்தல். |
| **மரியாதை** | ஒருவரை நன்றி பாராட்டுதல்; போற்றுதல்; சமுதாய அமைப்பின் விதிமுறைகளை மதித்தல். |

| நெறி | நெறியின் விளக்கம் |
|---|---|
| **அன்புடைமை** | தூய உள்ளத்திலிருந்து அக்கறையுணர்வும் அன்பும் தோன்றுதல். |
| **நடுவுநிலைமை** | செயற்பாட்டிலும் முடிவெடுத்தலிலும் சார்பின்றிச் செயல்படுதல். |
| **துணிவு** | அறைகூவல்களை நம்பிக்கையோடும் மனவுறுதியோடும் எதிர்கொள்ளல். |
| **நேர்மை** | உண்மை உரைத்தல், நாணயமாக நடத்தல், ஒவ்வொரு செயலிலும் உளத்தூய்மை கொண்டிருத்தல். |
| **ஊக்கமுடைமை** | ஒரு செயலைச் செய்வதில் விடாமுயற்சி, ஊக்கம், அர்ப்பணிப்பு உணர்வு கொண்டிருத்தல். |
| **ஒத்துழைப்பு** | அனைவரின் நலனுக்காக ஒன்றிணைந்து செயல்படுதல். |
| **மிதமான மனப்பான்மை** | தன்னலமும் பிறர்நலமும் பாதிக்காத வகையில் சீர்தூக்கிப் பார்ப்பதிலும் நடப்பதிலும் மிதமான போக்கைக் கடைப்பிடித்தல். |
| **விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை** | தன் வளத்திற்காகவும் பிறர் வளத்திற்காகவும் விட்டுக்கொடுத்தல்; பொறுத்தல்; தன்னைக் கட்டுப்படுத்துதல். |

இதைத் தவிர்த்து நன்னெறிக்கல்விக் கலைத்திட்டத்தில் ஒருமைப்பாடு மிகவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அஃது ஒருமைப்பாட்டின் முதன்மைக்கட்டுமக்கூறுகளான பல்வகைமை ஏற்றல், பல்வகைமை மதித்தல், பல்வகைமை நிருவகித்தல்வழி தெளிவாக வெளிப்படுத்தப் படுகிறது. ஒவ்வொரு முதன்மைக்கட்டுமக் கூறிலும் உள்ள துணைவுருவாக்கக்கூறுகள் உண்மையிலேயே மாணவர்களிடையே ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவேண்டிய கூறுகளாக அமைகின்றன. பல்வகைமை ஏற்றல் தன்மை என்பது மாணவர் சமயம், இனம், பண்பாடு, மொழி அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் திறந்த மனப்போக்கு, விட்டுக் கொடுத்தல், நம்பிக்கை, ஒத்துழைப்புப் போன்ற பண்புகளைக் கொண்டவராக இருத்தலாகும். துணைக்கட்டுமக் கூறுகளுள் ஒன்றான பல்வகைமை மதித்தல் என்பது சமயம், இனம், பண்பாடு, மொழி போன்ற கூறுகளில் மாணவர் வேறுபட்டிருந்தாலும் உயர்வெண்ணம், நன்றி பாராட்டுதல், சீர்தூக்கிப் பார்த்தல் போன்ற பண்புகளை அமல்படுத்த வேண்டும். பல்வகைமை நிருவகித்தல் என்பது சமயம், இனம், பண்பாடு, மொழி போன்ற கூறுகளில் மாணவர் வேறுபட்டிருந்தாலும் நாணயம், நடுவுநிலைமை, ஏற்புடைமை போன்ற பண்புகளை அமல்படுத்துவதைக் குறிப்பதாகும்.

நன்னெறிப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இப்பாடத்தின் கல்விநெறி, உள்ளடக்கம் ஆகியவற்றை மாற்றம் செய்யாமல் ஒருமைப்பாட்டுக்கு ஏற்புடைய நெறி அல்லது தலைப்புகளை இப்பாடக்கூறுகளுக்கேற்றவாறு தொடர்புபடுத்த வேண்டும்.

## 21-ஆம் நூற்றாண்டின் திறன்கள்

தொடக்கப்பள்ளிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று 21ஆம் நூற்றாண்டின் திறன்களைக் கொண்ட மாணவர்களை உருவாக்குவதாகும். குறிப்பாகச் சிந்திப்பதிலும் வாழ்வியல் திறனிலும் தொழிலியலிலும் மேம்பாடடைந்த மாணவர்கள் உருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது வெற்றிபெற ஒவ்வொரு மாணவரும் கைவரப்பெற வேண்டிய திறனும் பண்பும் அட்டவணை 2-இல் விவரிக்கப்பட்டுள்ள மாணவரின் தன்விவரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

நன்னெறிக்கலைத்திட்டத்தின் உள்ளடக்கத் தரம், கற்றல் தரம் ஆகியவற்றின் அடைவுநிலைவழி மாணவர்களிடையே 21ஆம் நூற்றாண்டின் திறன்கள் உட்படுகின்றன.

அட்டவணை 2: மாணவரின் சுயவிவரம்

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| **தாங்கும் வலிமை** | இடர்களையும் சவால்களையும் அறிவுடனும் நம்பிக்கையுடனும் சகிப்புத்தன்மையுடனும் பரிவுடனும் எதிர்கொண்டு வெல்லும் திறன் கொண்டிருப்பர். |
| **தொடர்புகொள்ளும் திறன்** | பல்வகை ஊடகங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்திச் சிந்தனை, ஏடல், தகவல் ஆகியவற்றைத் தன்னம்பிக்கையுடனும் ஆக்ககரமாகவும் பேச்சு, எழுத்து மூலம் வெளிப்படுத்துவர். |
| **சிந்தனையாளர்** | ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனை உடையவர்; சிக்கல்களைக் களைந்து நியாயமான முடிவெடுப்பவர்; மாணவர் நிலையில் நின்று கற்றலைச் சிந்திப்பவர்; தனிமனிதர் மற்றும் சமுதாயத்தின் நோக்குநிலை, பண்பாடு, பழக்கவழக்கம் ஆகியவற்றைத் திறந்த மனத்தோடு பார்ப்பவர்; தன்னம்பிக்கையோடும் ஆக்கத்தோடும் புதியதைக் கற்றுக் கொள்பவர். |
| **குழுவாகச் செயல்படுதல்** | விளைபயன்மிக்க வகையிலும் சுமூகமாகவும் பிறருடன் ஒத்துழைப்பர்; குழு உறுப்பினர் ஒவ்வொருவரின் பங்களிப்பை மதிப்பதோடு குழுவோடு சேர்ந்து பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்; ஒருங்கிணைந்து செயல்படுவதன்வழி பிறரிடைத் தொடர்பு□□திறனைப் பெறுதல். இதன்வழி சிறந்த தலைவராகவும் குழு உறுப்பினராகவும் இருக்கும் தகுதியைப் பெற்றிருப்பர். |

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| **அறியும் ஆர்வம்** | புதிய அணுகுமுறையையும் ஏடல்களையும் தெரிந்து கொள்வதற்கு ஆர்வத்தை ஏற்படுத்திக் கொள்வர். ஆய்வு மேற்கொள்ளத் தேவையான திறன்களைக் கற்பதோடு சுயமாகவும் கற்கக்கூடியவர். வாழ்நாள் கற்றல் அனுபவங்களைத் தொடர்ச்சியாக நுகர்ந்து மகிழ்வர். |
| **கொள்கையுள்ளவர்** | தனி நபர் மற்றும் சமூகத்தின் தன்மானத்தை மதிப்பதோடு நாணயம், நேர்மை, சமத்துவம், நீதி ஆகிய பண்புகளையும் கொண்டிருப்பர். தங்களின் முடிவுகளுக்கும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் விளைவுகளுக்கும் பொறுப்பேற்பர். |
| **தகவல் நிறைந்தவர்** | பல்வேறு துறைசார்ந்த அறிவினைப் பெற்று அதனை ஆழமாகவும் விரிவாகவும் புரிந்து கொள்வர். உள்நாட்டு, அனைத்துலக விவகாரங்களைத் திறமையாகவும் விளைபயனுள்ள வகையிலும் ஆராய்வர். கிடைக்கப்பெற்ற தகவல்கள் தொடர்பான நன்னெறி அல்லது சட்டச்சிக்கல்களைப் புரிந்திருப்பர். |
| **அன்பானவர் / பரிவுள்ளவர்** | பிறர் தேவையையும் உணர்வையும் புரிந்து கொண்டு மதிப்பும் பரிவும் இரக்கமும் காட்டுவர். சமுதாயச் சேவையில் தங்களை முனைப்புடன் ஈடுபடுத்திக்கொள்வர். சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்வர். |
| **நாட்டுப்பற்று** | நாட்டின்மீது அன்பையும் மரியாதையையும் ஆதரவையும் காட்டுவர். |

**உயர்நிலைச்சிந்தனைத் திறன்**

கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்கள் உயர்நிலைச்சிந்தனைத் திறனைச் சரியாகப் பொருள்பெயர்ப்புச் செய்து மாணவர்களின் சிந்தனையை முறைப்படுத்தும் வகையில் அது கலைத்திட்டத்தில் தெரிநிலையில் எழுதப்பட்டுள்ளது. அட்டவணை 3இல் உயர்நிலைச்சிந்தனைத் திறனின் நான்கு சிந்தனைப்படிநிலைகள் விளக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3: உயர்நிலைச் சிந்தனைத்திறனுக்கான சிந்தனைப் படிநிலைகள்**

| சிந்தனைப் படிநிலைகள் | விளக்கம் |
|---|---|
| பயன்படுத்துதல் | அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பல்வேறு சூழல்களில் பயன்படுத்தி ஒன்றைச் செய்தல். |
| பகுத்தாய்தல் | தகவலைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து அவற்றை ஆழமாகப் புரிந்துகொள்வதோடு அவற்றுக்கிடையிலான தொடர்பையும் அறிதல். |
| மதிப்பிடுதல் | அறிவு, அனுபவம், திறன், பண்பு ஆகியவற்றைக் கொண்டு பரிசீலனை செய்தல்; முடிவெடுத்தல்; நியாயப்படுத்துதல். |
| உருவாக்குதல் | ஆக்கப் புத்தாக்கத் தன்மையைக் கொண்ட பொருள், ஏடல், வழிமுறை ஆகியவற்றை உருவாக்குதல். |

அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பயன்படுத்திச் சீர்தூக்கிப் பார்த்து, மீட்டுணர்ந்து சிக்கல் களையவும் முடிவெடுக்கவும் புத்தாக்கச் சிந்தனையுடன் ஒன்றை உருவாக்கவும் பயன்படுகின்ற சிந்தனை ஆற்றலே உயர்நிலைச்சிந்தனைத் திறனாகக் கருதப்படுகின்றது. உயர்நிலைச்சிந்தனைத் திறன் ஆய்வுச்சிந்தனை, ஆக்கச்சிந்தனை, சீர்தூக்கிப்பார்த்தல், சிந்தனை வியூகம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

**ஆய்வுச்சிந்தனை** என்பது தக்கக் காரணங்களையும் சான்றுகளையும் கொண்டு அறிவார்ந்த நிலையில் ஏரணமாகச் சீர்தூக்கிப் பார்த்து மதிப்பீடு செய்யும் ஆற்றலாகும்.

**ஆக்கச்சிந்தனை** என்பது கற்பனை ஆற்றலைக்கொண்டு பாரம்பரிய முறையில் இல்லாமல் மாறுபட்ட கோணத்தில் மதிப்புயர்வுமிக்க புதிய ஒன்றனை உருவாக்கும் ஆற்றலாகும்.

**சீர்தூக்கிப் பார்த்தல்** என்பது ஏரணமான முறையில் பரிசீலனை செய்யவும் மதிப்பிடவும் கூடிய ஆற்றலாகும்.

**சிந்தனை வியூகம்** என்பது சிக்கலுக்குத் தீர்வுகாணும் வகையில் கட்டமைப்பினைக் கொண்ட தீர்க்கமான சிந்தனையாகும்.

சீர்தூக்கிப்பார்த்தல், ஆய்ந்தறிதல்வழி கற்றல், சிக்கலுக்குத் தீர்வு காணுதல், செயல்திட்டம் ஆகிய நடவடிக்கைகள்வழி உயர்நிலைச் சிந்தனைத் திறனை வகுப்பறையில் கற்பிக்கலாம். சிந்தனைவரைவு, மனவோட்டவரைவு போன்ற சிந்தனைக்கருவிகளைப் பயன்படுத்தியும் உயர்நிலைச் சிந்தனைக்கேள்விகள் வாயிலாகவும் ஆசிரியர்கள் மாணவர்களின் சிந்தனைத் திறனைகளை வளர்க்கலாம்.

**கற்றல்கற்பித்தல் அணுகுமுறைகள்**

தொடக்கப்பள்ளிக்கான நன்னெறிக்கலைத்திட்டம் மாணவர்கள் கற்றல் கற்பித்தலில் ஊக்கத்துடனும் இருவழி ஊக்கத்துடனும் செயல்பட வழிவகுக்கிறது. இவ்வகையான பங்கேற்பு நிறைநிலை மாந்தரை உருவாக்கும் ஒரு முயற்சியாகும். கருத்து, ஏடல் கூறும்போதும் பகிரும்போதும் மாணவர்களிடையே வினவுதல், தொடர்புகொள்ளுதல், இருவழி உரையாடுதல் ஆகியவை ஏற்படச் செய்கிறது. மேலும், மாணவர்கள் தாங்கள் மலேசிய, உலகக்குடிமக்களாக இருந்து அவற்றின் பங்கு, பொறுப்பு ஆகியவற்றைப் புரிந்துகொள்ளவும் ஆய்வு செய்யவும் இக்கற்றல்கற்பித்தல் அணுகுமுறைகள் வழிவகுக்கின்றன.

ஊக்கத்துடன் கற்றல், சிக்கல் அடிப்படையிலான கற்றல், சமுதாயத்தொண்டுவழி கற்றல், செயல்திட்ட அடிப்படையிலான கற்றல் ஆகியவை தொடக்கப்பள்ளிக்கான நன்னெறிக்கலைத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளாகும்.

**ஊக்கத்துடன் கற்றல்**

நன்னெறிக்கல்வியில் ஊக்கத்துடன் கற்றல் என்பது, சமூகப்பிரிவுகளான குடும்பம், பள்ளி, தோழர், வட்டாரச்சமூகம், சமயம், நாடு, உலகம் போன்றவற்றில் மாணவர் விளைபயன்மிக்க உறுப்பினராகப் பங்கு, பொறுப்புகளை ஆற்றுவதை விளக்குவதாக உள்ளது. இதற்குக் காரணம், ஊக்கத்துடன் கற்றல் எனும் இவ்வணுகுமுறையானது கற்றலின்

செயற்பாங்கில் மாணவர்கள் இயக்க நடவடிக்கையும் சிந்தனை நடவடிக்கையும் மேற்கொள்ள வழிசெய்கிறது. இக்கற்றல், மாணவர்கள் அன்றாட வாழ்வில் திறன், நெறி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் முழு மனிதவளத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் துணைசெய்கிறது.

நன்னெறிக்கல்வி கற்றல்கற்பித்தலில் ஊக்கத்துடன் கற்றலில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அவை கலந்துரையாடல் அல்லது குழு சிறுநடவடிக்கைகளான முரலொலிமுறை (buzzing), கருத்தூற்று முறைமை, பாகம் ஏற்றல், போலச் செய்தல், சொற்போர், வாதமேடை ஆகும்.

**சிக்கல் அடிப்படையிலான கற்றல்**

21-ஆம் நூற்றாண்டின் உலகமயமாதலில் வட்டாரச்சமூகம், தேசியம், அனைத்துலகம் ஆகியவற்றில் பலவகை மாற்றங்களும் சிக்கல்களும் ஏற்படுகின்றன. நன்னெறிக்கல்வி பயிலும் மாணவர் தானாகவோ சமூகமாகவோ சிக்கல்களைக் களைய பல்வேறு சவால்களை எதிர்நோக்குவர். இக்கற்றலானது நன்னெறிக்கல்வி பயிலும் மாணவர் தனக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படும் சிக்கல்களைக் களைய வழிகாட்டியாக அமையும் முக்கியக் கற்றலாகும். இதற்குக் காரணம், ஆய்வு செய்யக்கூடிய நன்னெறிச்சிக்கலால் எடுக்கப்படும் முடிவு பொருளுடையதாகவும் ஏற்புடையதாகவும் வாழ்வில் செயல்படுத்தக் கூடியதாகவும் அமையும். பொதுவாக, நன்னெறிக்கல்வியின் சிக்கல் களைவுவழி கற்றல் மாணவர் நன்னெறிச்சிக்கலுக்குத் தானாகவே தீர்வுகாணத் தன் பங்கையும் பொறுப்பையும் கீழ்க்கண்ட தேடல்வழி கற்றல் மூலம் மேற்கொள்ளலாம்:

- சிக்கலை அடையாளங்காணுதல்; விவரித்தல்.
- உண்மை, கருத்து, சம்பந்தப்பட்ட கதாபாத்திரத்தின் உணர்வு ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்ப்பதன்வழி சிக்கல் களைய பல்வேறு தீர்வுகளை உறுதிப்படுத்துதல்.
- சிக்கலைக் களைய கட்டுப்பாட்டுக்கோட்பாடு (Theory of Constraints), மனவோட்டவரைவு, காரணகாரியம், மனக் குழப்பத்தீர்வு போன்ற அணுகுமுறைகளைத் தேர்ந்தெடுத்தல்.
- சிக்கல் தொடர்புடைய ஏற்புடைய தகவல்களைத் திரட்டுவதன் வழியாகவும் மதிப்பிடுவதன்வழியாகவும் மாறக்கூடிய முடிவுகளை மதிப்பிடுதல்.
- இறுதி முடிவெடுத்தல் அல்லது படிநிலைகள், அணுகுமுறைகளை மாற்றியமைத்தல்.

நன்னெறிக்கல்வியில் ஊக்கத்துடன் சிக்கல் அடிப்படையிலான கற்றலானது மாணவர்கள் வாழ்விலும் சுற்றுப்புறத்திலும் ஏற்படக்கூடிய மாற்றங்களைப் பொறுப்புடனும் விளைபயன்மிக்கதாகவும் புரிந்துகொள்ள, தீர்வுகாண அடிப்படையாக அமையும்.

நன்னெறிக்கல்வி கற்றல் கற்பித்தலில் சிக்கல் அடிப்படையிலான கற்றலை மேற்கொள்ளக்கூடிய பல நடவடிக்கைகள் உள்ளன:

- வட்டமேசைக் கலந்துரையாடல்
- மனவோட்டவரைவு அல்லது குறிவரைவு
- குழு கலந்துரையாடல்
- பாகமேற்றல்
- வினா தொடுத்தல்
- நடுவர் குழுமம்
- சொற்போர்

**சமுதாயத்தொண்டுவழி கற்றல்**

சமுதாயத்தொண்டுவழி கற்றல் மாணவர்கள் சமுதாய நடவடிக்கைகளில் விருப்பத்துடன் ஈடுபட வழி செய்கிறது. இக்கற்றலின் வழி மாணவர்கள் தங்களின் அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பயன்படுத்திப் பள்ளியிலும் சமுதாயத்திலும் நாட்டிலும் உலகத்திலும் ஏற்படக்கூடிய சிக்கல்களைக் களைய இயலுகிறது.

மேலும், சமுதாயத்தொண்டுவழி கற்றலின் வாயிலாக மாணவர்கள் சமுதாய நடவடிக்கையின்போது பொறுப்புணர்ச்சி, தலைமைத்துவம் ஆகியவற்றைச் செயல்படுத்த இயலும். அதே வேளையில் மாணவர்கள் சமுதாயத்திற்குத் தொண்டாற்றும்போது நன்னெறிப்பண்புகளையும் சமுதாயக்கூறுகளையும் கடைப்பிடிப்பர். சமுதாயத்தொண்டுவழி கற்றலின் வாயிலாக மாணவர்கள் இருவழி ஊடாடி ஊக்கத்துடன் பொறுப்பான மனிதராக ஆவதையும் சமுதாய வளத்□□□□□□□□ துணைசெய்வதையும் கற்றுக்கொள்வர்.

சமுதாயத்தொண்டுவழி கற்றலுக்குப் பெற்றோர், ஓரிடச்சமூகத்தினர் ஆகியோரின் ஊக்குவிப்பும் பங்கேற்பும் தேவைப்படுகிறது. ஆகவே, மாணவர்கள் சமுதாயத்தொண்டுகளில் எளியமுறையில் ஈடுபட நன்னெறிக்கல்வி ஆசிரியர் ஓரிடச்சமுதாய நிறுவனங்களுடன் கூட்டுமுறை, இணைமுறை ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும். நன்னெறிக்கல்வி கற்றல் கற்பித்தலில் செயல்படுத்தக்கூடிய பல்வேறு சமுதாயத்தொண்டுவழி கற்றல் நடவடிக்கைகள் உள்ளன:

- குடியிருப்புப்பகுதியில் கூட்டுப்பணி, பள்ளிப்பூஞ்சோலை தூய்மைப்படுத்துவதில் பள்ளிக்குடியினருக்கு உதவுதல், முதியோர் இல்ல குடியிருப்பாளர்களுக்கு உதவுதல் போன்ற பல்வேறு நேரடித் தொண்டுகள் ஆற்றுதல்.
- இயற்கைப்பேரிடர்களில் பாதிக்கப்பட்டோருக்கு நன்கொடை திரட்டுவதில் பொறுப்பேற்றுள்ள நிறுவனங்களுக்கு மறைமுகத் தொண்டுகள் வழங்குதல்.

- வறியவருக்கு ஏற்புடைய பொதுநல வசதிகள் ஏற்படுத்துவதில் குறிப்பிட்ட தரப்பினருக்குக் கடிதம் எழுதுவதிலும் புகார் செய்வதிலும் சமுதாய உறுப்பினரோடு இணைநடவடிக்கை மேற்கொள்ளுதல்.

**செயல்திட்ட அடிப்படையிலான கற்றல்**

நன்னெறிக்கல்விக் கற்றல் கற்பித்தல் மாணவரை மையமாகக் கொண்டதும் பல்வேறு கற்றல் முறைமைகள்வழி நன்னெறி நடத்தையைப் புதைநிலையாக வெளிக்கொணர்வதுமாகும். நன்னெறிக்கல்வியில் செயல்திட்ட அடிப்படையிலான கற்றல் என்பது குறியிலக்குடைய கற்றல் செயற்பாங்காகும். அப்பணி குறிப்பிட்ட காலக்கட்டத்தில் திட்டமிடப்பட்ட செயல்முறைப்பணியைச் செய்வதாகும். பொதுவாகவே அது தரவுகளைத் திரட்டுவதும் பகுத்தாய்வதும் முழு அறிக்கையைத் தயார் செய்வதையும் உள்ளடக்கியதாகும். செயல்திட்ட அடிப்படையிலான கற்றல், விளைபயன்மிக்க நன்னெறிக்கல்விக் கற்றல் கற்பித்தலை ஏற்படுத்துவதோடு ஈர்ப்புத்தன்மை, மகிழ்வுணர்வு ஆகியவற்றை விளைவிப்பதாகவும் அமைகிறது.

செயல்திட்ட அடிப்படையிலான கற்றலைச் செயல்படுத்துவதில் மாணவர்களின் ஆற்றல் நிலைக்கேற்பத் தனியாள்முறையிலோ குழுமுறையிலோ இடுபணி கொடுக்கப்படும். ஆசிரியர் வழங்கிய செயல்திட்டத்தை நிறைவுசெய்ய மாணவர்கள் பல்வேறு மூலங்களிலிருந்து தகவல்களைப் பெற வேண்டும். இச்செயல்திட்டம் நிறைவுசெய்யும் காலக்கட்டங்களில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டவும் மதியுரைக்கவும் வேண்டும்.

இச்செயல்திட்டத்தை மாணவர்கள் தயார் செய்யும்போது ஆசிரியர் தொடர்ச்சியாகக் கண்காணிக்க வேண்டும். இந்நன்னெறிக்கல்விச் செயல்திட்டம் நான்கு நிலைகளை உட்படுத்தியது. அவை தகவல் திரட்டுதல், திரட்டிய தகவலைச் செயல்முறைப்படுத்துதல், செயல்திட்ட விளைவைத் தெரிவித்தல், தன்மீட்டுணர்வு செய்தலாகும். மாணவர்கள் எளிமையாகத் தகவல் பெறுவதற்கு நன்னெறி ஆசிரியர்கள் எந்நேரமும் தயாராக இருக்க வேண்டும்.

மாணவர்களுக்கு வழங்கப்படும் செயல்திட்டம் அல்லது பயில்பணி மூலம் நன்னெறிச்சிந்தனை, நன்னெறியுணர்வு, நன்னெறி நடத்தை என்னும் மூன்று களங்கள் மாணவர்களிடையே வெளிக்கொணர்வதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும். அந்நோக்கத்திற்காக, நன்னெறிக்கல்விக் கலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கும் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பயன்படுத்த ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

**விரவிவரும் கூறுகள்**

விரவிவரும் கூறுகள் உள்ளடக்கத் தரத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவற்றைத் தவிர்த்துக் கற்றல் கற்பித்தலில் கூடுதலாக இணைக்கப்பட வேண்டிய கூறுகளாகும். இவை, மாணவர்களின் திறனையும் சால்பையும் திடப்படுத்துகின்றன. தற்கால, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் சமன்நிலையிலான மனித மூலதனத்தை உருவாக்குவதற்காகவே கற்றல் கற்பித்தலில் கீழ்க்கண்ட விரவிவரும் கூறுகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

1. **மொழி**

- எல்லாப் பாடங்களிலும் மொழி சரியாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் ஏடல்களை விளைபயன்மிக்க வகையில் நல்ல மொழியைப் பயன்படுத்தி வெளிப்படுத்த உதவும் வகையில் ஒவ்வொரு பாட கற்றல் கற்பித்தலின் போதும் ஆசிரியர் மாணவர்களின் உச்சரிப்பு, வாக்கிய அமைப்பு, இலக்கணம், கலைச்சொல் பயன்பாடு, மொழிநடை ஆகியவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

2. **சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்**

- அனைத்துப் பாட கற்றல் கற்பித்தலின் போதும் சுற்றுச்சூழலை நேசித்தல், பராமரித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தின் விழிப்புணர்வை மாணவர்களின் மனத்தில் பதியவைக்க வேண்டும்.
- சுற்றுச்சூழல் தொடர்பான அறிவும் விழிப்புணர்வும் மாணவரிடையே சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பண்பை வளர்க்க உதவும்.

3. **நன்னெறிப்பண்பு**

- மாணவர்கள் நற்பண்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனைக் கடைப்பிடிக்கும் பொருட்டு அனைத்துப் பாடங்களிலும் நன்னெறிப்பண்பு வலியுறுத்தப்பட வேண்டும்.
- ஆன்மிகம், மனிதவியல், குடியியல் ஆகிய நன்னெறிப்பண்பு அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியகூறுகளாகும்.

4. **அறிவியலும் தொழில்நுட்பமும்**

- மாணவர்களிடையே அறிவியல், தொழில்நுட்ப ஆர்வத்தை வளர்ப்பதன்வழி அவர்களின் அறிவியல், தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த இயலும்.
- கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், விளைபயன்மிக்க கற்றலை உருவாக்க உதவும்.

- கற்றல் கற்பித்தலில் அறிவியல், தொழில்நுட்ப இணைப்பு கீழ்க்கண்ட நான்கு கூறுகளை உள்ளடக்கியுள்ளது.
  - i. அறிவியல், தொழில்நுட்ப அறிவு (அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த கருத்து, கோட்பாடு, கருத்துக்கோடல்)
  - ii. அறிவியல் திறன் (அறிவியல் சிந்தனையும் கையாளும் திறனும்)
  - iii. அறிவியல்பண்பு (துல்லியம், நேர்மை, பாதுகாப்பு)
  - iv. கற்றல்கற்பித்தலில் தொழில்நுட்பப் பயன்பாடு

### 5. நாட்டுப்பற்று

- எல்லாப் பாடங்கள், புறப்பாட நடவடிக்கைகள், சமூக சேவைகள் ஆகியவற்றின்வழி மாணவர்களிடையே நாட்டுப்பற்றை வளர்க்க இயலும்.
- நாட்டை நேசிக்கும் மலேசியக்குடிமகன் என்ற பெருமிதம் கொண்ட மாணவர்களை உருவாக்க இயலும்.

### 6. ஆக்கமும் புத்தாக்கமும்

- ஆக்கம் என்பது கற்பனை ஆற்றலைக் கொண்டு ஏடலைச் சேகரித்துப் பகுத்தாய்ந்து புதிதான அல்லது அசலான ஒன்றை உருவாக்குவதாகும்.
- ஆக்கச் சிந்தனையின்வழி ஏடலை மாற்றம் செய்து சீர்செய்து அதனை அமலாக்கப்படுத்துவதே புத்தாக்கம் ஆகும்.
- ஆக்கமும் புத்தாக்கமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றன. இவை 21-ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் மனித மூலதனத்தை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றன.
- ஆக்கப் புத்தாக்கக் கூறுகள் கற்றல்
- கற்பித்தலில் முறையாக இணைக்கப்படுதல் வேண்டும்.

### 7. தொழில்முனைப்பு

- தொழில்முனைவருக்கு இருக்க வேண்டிய தன்மைகளை மாணவர்களிடையே உருவாக்குவதையும் அவற்றை வாழ்வியல் பண்பாடாக வழக்கப்படுத்துவதையும் தொழில்முனைப்புக் கூறு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுறுசுறுப்பு, நேர்மை, நம்பகத்தன்மை, பொறுப்புணர்ச்சி, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனை போன்றவற்றைக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் புகுத்துவதன்வழி தொழில்முனைப்புத் திறனை மாணவர்களிடையே வளர்க்க இயலும்.

### 8. தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைக் கற்றல் கற்பித்தலில்

இணைப்பதன்வழி மாணவர்கள் தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அறிவையும் பயன்பாட்டினையும் அறிவதோடு அவற்றைத் திடப்படுத்திக்கொள்ளவும் முடியும்.

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் மாணவர்களை ஆக்கச் சிந்தனை உடையவர்களாக உருவாக்குவதோடு கற்றல் கற்பித்தல் கவர்ச்சிகரமானதாகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் அமைய வழிவகுக்கும். இதன்வழி, மாணவர்களின் கற்றல் தரம் உயரும்.
- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் கூறுகள் கற்றல் கற்பித்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புக்குப் பொருத்தமானதாக அமைவதை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும். இது, மாணவர்கள் பாடத்தின் உள்ளடக்கத்தைச் சிறந்த முறையில் விளங்கிக்கொள்ள வழிவகுக்கும்.
- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தில் ஒரு கூறாக வலியுறுத்தப்படும் கணினி□□ சிந்தனையாற்றல் எல்லாப்பாடங்களிலும் பயன்படுத்த இயலும். கணினி சிந்தனையாற்றலின் உட்கூறுகளான ஏரணச்சிந்தனை, பகுத்தல் குறிக்கணக்கியல், சிக்கல்களையும் தீர்வு, அளவிடல், மற்றும் மதிப்பிடல் என்பது கணினியின் உதவியோடு சிக்கலைத் தீர்க்கும் செயல்பாடாகும்.

## 9. உலகளாவிய நிலைத்தன்மை

- உற்பத்தி மற்றும் பயன்பாடு, உலகளாவிய குடிமை, ஒற்றுமை ஆகியவற்றின்வழி கிடைக்கப்பெறுகின்ற அறிவையும் திறனையும் பண்பையும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தி, சுற்றுச்சூழலைப் பொறுப்புடன் கையாளுவதற்குத் தேவைப்படும் நிலைத்தன்மையான சிந்தனையைப் பெற்ற மாணவரை உருவாக்குவதையே உலகளாவிய நிலைத்தன்மைக்கூறு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உள்ளூர், நாடு, உலகளாவிய சவால்களையும் நிகழ்காலச் சிக்கல்களையும் மாணவர்கள் எதிர்நோக்க உலகளாவிய நிலைத்தன்மைக்கூறு முக்கியமாகக் கருதப்படுகின்றது.

## 10. நிதிக்கல்வி

- நிதிக்கல்விக்கூறு பொறுப்புள்ள வகையில் நிதியை நிர்வகிக்கவும் நேர்மையான வகையில் நிதி நிர்வாகத்தைச் செயல்படுத்தவும் அறிவார்ந்த நிலையில் நிதி தொடர்பான முடிவெடுக்கவும் கூடிய திறமையான எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

- நிதிக்கல்விக்கூறு மாணவர்களுக்கு நேரிடையாகவும் இடைச்செருகலாகவும் கற்பிக்கப்படுகிறது. வட்டி கணக்கீட்டு

முறை போன்ற நிதி தொடர்பான தலைப்புகள் நேரிடையாகக் கற்பிக்கும் வகையில் தர ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மற்றத் தலைப்புகள் இடைச்செருகலாக விரவி வரும் கூறுகள் அணுகுமுறையில் கற்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விளைபயன்மிக்க வகையில் நிதி நிர்வாகத்தை மேற்கொள்ள மாணவர்களுக்கு நிதிக்கல்வி மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது.

**வகுப்பறை மதிப்பீடு**

மாணவரின் கற்றல் வளர்ச்சியை அறிந்து கொள்வதற்காக ஆசிரியர் மேற்கொள்ளும் நடவடிக்கையே வகுப்பறை மதிப்பீடாகும். ஆசிரியர் இதனைத் திட்டமிடுவதோடு முறையாக அமலாக்கம் செய்து கிடைக்கப் பெறும் தகவலை அறிக்கையின்வழி வெளியிடுதல் வேண்டும். மாணவரின் அடைவுநிலையை நிர்ணயம் செய்வதற்கு இந்நடவடிக்கையை ஆசிரியர் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

முறைசார்ந்த மற்றும் முறைசாரா மதிப்பீட்டு முறைகளில் ஆசிரியர் வகுப்பறை மதிப்பீட்டை மேற்கொள்ளலாம். கற்றல்

கற்பித்தல் செயலாக்கத்தின் போது நடைபெறுவதே முறைசாரா மதிப்பீடு. ஒரு பாடத்தொகுதியின் இறுதியிலோ ஆண்டின் இறுதியிலோ நடத்தப்படுவது முறைசார்ந்த மதிப்பீடாகும். தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தின் அடிப்படையில் ஆசிரியர் திட்டமிடுதல், வினா மற்றும் மதிப்பீட்டுக் கருவி உருவாக்குதல், அவற்றை நிர்வகித்தல், புள்ளி வழங்குதல், முடிவுகளைப் பதிவு செய்தல், அறிக்கை தயாரித்தல் ஆகிய முக்கியப் பணிகளைச் செயல்படுத்த வேண்டும்.

மாணவரின் திறனையும் அடைவுநிலையையும் மேம்படுத்துவதற்கு மதிப்பீடு உதவியாக இருக்கும் பொருட்டு ஆசிரியர் கீழ்க்கண்ட தன்மைகளைக் கொண்ட மதிப்பீட்டை அமலாக்கம் செய்தல் வேண்டும்:

- அவதானிப்பு, பேச்சு, எழுத்து போன்ற பல்வகை மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்துதல்.
- ஆசிரியரும் மாணவரும் செயல்படுத்தக்கூடிய பல்வகை மதிப்பீட்டு அணுகுமுறைகளைப் பயன்படுத்துதல்.
- மாணவர்கள் கற்ற பல்வகை அறிவு மற்றும் திறன்களின் அளவைக் கருத்தில் கொள்ளுதல்.
- மாணவர்கள் பல்வகை கற்றல் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் அமைதல்.

- கற்றல் தரம், தர அடைவு ஆகியவற்றின் அடிப்படையில் மாணவர்களின் அடைவுநிலையை மதிப்பீடு செய்தல்.
- குறைகளைக் களைவதற்கும் வளப்படுத்துவதற்கும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

ஆசிரியர் மாணவர்களின் அடைவுநிலையைப் பொருத்தமான வகையில் குறித்து வைத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு மொழித்திறன்களையும் கற்பித்த பிறகு வழங்கப்பட்டுள்ள அறிக்கை வார்ப்புருவில் பதிவு செய்தல் வேண்டும்.

**உள்ளடக்க மதிப்பீடு**

உள்ளடக்க மதிப்பீடு என்பது ஒரு மாணவரின் கற்றல் வளர்ச்சி நிலையின் அடைவைக் காட்டுவதாகும். உள்ளடக்க மதிப்பீட்டில் ஆறு அடைவு நிலை ஏறுவரிசையில் அமைக்கப்பட்டுள்ளது. இது கலைத்திட்ட□□தில் முடிவுசெய்யப்பட்ட அறிவாற்றல், திறன், விழுமியம் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டுள்ளது. உள்ளடக்க மதிப்பீட்டை அட்டவணை 4 காட்டுகிறது.

**அட்டவணை 4: நன்னெறிக்கல்வியின் உள்ளடக்க மதிப்பீடு**

| அடைவு நிலை | விவரிப்பு |
|---|---|
| 1 **அறிதல்** | மாணவர்கள், அடிப்படைக் கூறுகளை அறிந்திருப்பர் அல்லது அடிப்படைத் திறன்களை நிறைவேற்றுவர் அல்லது அடிப்படைக் கூறுகளுக்கு ஏற்பத் துலங்குவர். |
| 2 **அறிதலும் புரிதலும்** | மாணவர்கள், தான் புரிந்து கொண்டதைத் தொடர்பு முறையில் தெளிவாக வெளிப்படுத்துவர். |
| 3 **அறிந்து புரிந்து செய்தல்** | மாணவர்கள், அறிவாற்றலைக் கொண்டு குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட ஒரு திறனைச் செயல்படுத்துவர். |
| 4 **அறிந்து புரிந்து பண்போடு செய்தல்** | மாணவர்கள், அறிவாற்றலைக் கொண்டு சரியான பகுப்பாய்வுடனும் முறைமையுடனும் நடைமுறைக்கு ஏற்றவாறு குறிப்பிட்ட ஒரு திறனைப் பண்புடன் செயல்படுத்துவர். |
| 5 **அறிந்து புரிந்து போற்றத்தக்கப் பண்போடு செய்தல்** | மாணவர்கள், சரியான முறைமை அல்லது நடைமுறைக்கு ஏற்றவாறும் நிலைத்தன்மையோடும் நேர்மறைத் தன்மையோடும் புதிய சூழலில் குறிப்பிட்ட ஒரு திறனைச் செயல்படுத்துவர். |
| 6 **அறிந்து புரிந்து முன்மாதிரியான தகைமைப் பண்போடு செய்தல்** | மாணவர்கள், அறிவாற்றலையும் முன்னறிவுத் திறனையும் புதிய சூழலில் பயன்படுத்தி ஆக்கம், புத்தாக்கம், முறைமை, நேர்மைத் தன்மை கொண்ட புதிய ஏடல்களின் உருவாக்கத்தில் முன்மாதிரியான தகைமைப்பண்புடன் செயல்படுவர். |

ஆசிரியர்கள் மாணவர்களின் வளர்ச்சி நிலையை ஆசிரியர் குறிப்பேடு, பயிற்சி நூல், குறிப்பேடு, விபரப்பட்டியல், அட்டவணை அல்லது பொருத்தமான பிறவற்றில் குறித்து வைக்கலாம். மாணவர்களின் அடைவு நிலை குறிப்பானது கருப்பொருள், திறன்கள், உள்ளடக்கத்தரம், கற்றல் தரம் ஒட்டிய கற்றல் கற்பித்தலுக்குப் பிறகு மதிப்பீட்டு அறிக்கையில் குறித்து வைக்கப்படவேண்டும்.

### ஒட்டு மொத்த அடைவுநிலை

நன்னெறிப் பாடத்தின் ஒட்டு மொத்த அடைவுநிலை ஆண்டு இறுதி**யில்** நிர்ணயிக்கப்படவேண்டும். ஒட்டு மொத்த அடைவுநிலை அறிவாற்றல், திறன் மற்றும் விழுமியம் ஆகியவற்றை உள்ளடக்கியது. ஆசிரியர் திரல்முறையிலும் முழுமையாகவும் கற்றல் படிநிலையில் உள்ள நன்னெறிச் சிந்தனை, நன்னெறி உணர்வு, நன்னெறி நடத்தை அடிப்படையில் மாணவர்களை மதிப்பிட வேண்டும். எல்லா மதிப்பீட்டுச் செயல்பாடுகளில் குறிப்பாக ஒட்டு மொத்த அடைவுநிலையை உறுதி செய்யும் பொழுது ஆசிரியர் நிபுணத்துவமாகச் சீர்தூக்கிச் செயல்பட வேண்டும். அறிவு, பட்டறிவு, ஆசிரியர் மாணவர் தொடர்பு, ஆசிரியர்களிடையே கலந்துரையாடல் அடிப்படையில் இந்த நிபுணத்துவத்தைச் செயல்படுத்தலாம். நன்னெறிக் கல்வியின் ஒட்டு மொத்த அடைவு நிலையை உறுதி செய்ய ஆசிரியர் அட்டவணை 5-ஐ மேற்கோளாகப் பயன்படுத்தலாம்.

**அட்டவணை 5: நன்னெறிக்கல்வியின் ஒட்டு மொத்த அடைவுநிலை**

| அடைவு நிலை | விவரிப்பு |
|---|---|
| 1 | கற்கும் நெறி தொடர்பான அடிப்படைக் கருத்தினை அறிவர். |
| 2 | கற்ற நெறியினைப் புரிந்துகொள்வர்; விவரிப்பர். |
| 3 | கற்ற நெறியினைத் தொடர்புபடுத்துவர்; கடைப்பிடிப்பர். |
| 4 | கற்ற நெறிக்கேற்ற சரியான மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். |
| 5 | கற்ற நெறியினை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர். |
| 6 | கற்ற நெறியினை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர் அல்லது எடுத்துக்காட்டாகத் திகழ்வர். |

நன்னெறிக் கல்வி மதிப்பீடானது வெறுமனே நன்னெறி அறிவை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிராமல் நன்னெறிப் பண்பை மேம்படுத்தவும் வளர்க்கவும் வலியுறுத்தப்படும் ஒரு முயற்சி. நன்னெறிக் கல்வி மதிப்பீட்டில் மற்ற தரப்பினர்களான சக தோழர், குடும்ப உறுப்பினர், சமூகத்தினர் ஆகியோரை ஏற்புடைமைக்கு ஏற்றவாறு இணைத்துக் கொள்ளலாம்.

**உள்ளடக்க அமைப்பு**

நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் தொடக்கப்பள்ளிகளுக்கான நன்னெறிக் கல்வித் தரக் கலைத்திட்டம் தற்போதைய சுற்றறிக்கையின்படி அமலாக்கம் பெற்றுள்ளது. நன்னெறிக்கல்வித் தரக் கலைத் திட்டத்தின் வழி உலகநெறிகளைக் கற்பிப்பதற்கு ஆறு கருப்பொருள்கள் கருவியாக அமைந்துள்ளன. மாணவர்களின் சுற்றுச்சூழலின் தொடர்பு அமைப்புகளான ஆன்மிகம், பண்பாடு, சமுதாய உணர்வு, சுற்றுச்சூழல் ஆகியவற்றோடு மேலும் பல கூறுகளையும் சீர்தூக்கிப்பார்த்து இக்கருப்பொருள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அட்டவணை 6--இல் அக்கருப்பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன:

**அட்டவணை 6: நன்னெறிக்கல்வியின் கருப்பொருள்கள்**

| ஆண்டு | கருப்பொருள் |
|---|---|
| 1 | நான் |
| 2 | நானும் குடும்பமும் |
| 3 | நானும் பள்ளியும் |
| 4 | நானும் அண்டை அயலாரும் |
| 5 | நானும் சமுதாயமும் |
| 6 | நானும் நாடும் |

ஒவ்வோர் உள்ளடக்கத் தரமும் கற்றல் தரம் மூலம் விவரிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் கற்றல் தரத்தை அடைய உள்ளடக்கத் தரத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். தர அடைவுநிலை என்பது கற்பிக்கப்பட்ட ஒன்றை மாணவர்கள் அடைந்ததற்காக வெளிப்படுத்தக்கூடிய படிநிலைகளாகும். மாணவர்களின் தேவை, வளர்ச்சி, முதிர்ச்சி போன்றவற்றைக் கருத்தில்கொண்டு தர அடைவு உருவாக்கப்படுகிறது. உள்ளடக்கத் தரம், கற்றல் தரம், தர அடைவு ஆகியவற்றுக்கான விளக்கம் அட்டவணை 7-இல் கொடுக்கப் பட்டுள்ளது.

**அட்டவணை 7: உள்ளடக்கத் தரம், கற்றல் தரம், தர அடைவு**

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட பள்ளிக்கால அளவில் மாணவர்கள் கல்வி தொடர்பான அறிவு, திறன், பண்புநெறி ஆகிய கூறுகளை உள்ளடக்கிய கூற்றினைப் பற்றித் தெரிந்துகொள்வதையும் அதன்படி இயங்குவதையும் உறுதிபடுத்துவதே உள்ளடக்கத் தரமாகும். | ஒவ்வோர் உள்ளடக்கத் தரத்திற்கேற்பத் தரமான கற்றல், அடைவுநிலை ஆகியவற்றை உறுதி செய்வதே கற்றல் தரமாகும். | தர அடைவு என்பது மாணவர்களின் கற்றல் அடைவுநிலையை விவரிக்கும் ஒன்றாகும். இது மாணவர்களின் கற்றல் வளர்ச்சி நிலைகளைக் காட்டுவதாகும். |

கற்றல் கற்பித்தல் சிறப்பாக நடைபெற ஆசிரியர் நன்னெறிக்கல்வி பாடத்தில் கலைத்திட்டத் தர ஆவண மதிப்பீட்டையும் தொடக்கப் பள்ளிக்கான கலைத்திட்டத் தரத்தையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர் கலைத்திட்டத் தர ஆவண மதிப்பீட்டு நிரல்களில் உள்ள உள்ளடக்கங்களை முழுமையாகப் புரிந்து உய்த்துணர வேண்டும். அந்நிரல்களின் விளக்கங்கள் பின்வருமாறு:

**உள்ளடக்கத் தர நிரல்**

மாணவர்கள் அறிய வேண்டிய, செயல்படுத்தக்கூடிய கருத்துரு, நன்னெறி நடவடிக்கை ஆகியவற்றின் குறிப்பான கூற்று உள்ளடக்கத் தர நிரலில் பட்டியலிடப்பட்டுள்ளது.

**கற்றல் தர நிரல்**

இந்நிரல் ஒவ்வோர் உள்ளடக்கத் தரத்தின் அடைவுநிலையை அளவிட உறுதிசெய்யப்பட்ட தரமான கற்றல், அடைவுநிலை ஆகியவற்றைக் குறிக்கின்றது. அவ்வகையான நன்னெறிக்கல்வியின் கற்றல் நிலைகளை மூன்று களங்களாகப் பிரிக்கலாம். அவை நன்னெறிச்சிந்தனை, நன்னெறியுணர்வு, நன்னெறி நடத்தையாகும். உறுதிசெய்யப்பட்ட அந்நிலைகள் மாணவர்கள் அடையக்கூடிய உயர்நிலைச் சிந்தனைத் திறன்களையும் கருத்தில் கொண்டவையாகும்.

**தர அடைவு நிரல்**

இந்நிரலில் உள்ள தர அடைவு என்பது மாணவர்களின் கற்றல் அடைவுநிலையை விவரிக்கும் ஒன்றாகும். இது மாணவர்களின் கற்றல் வளர்ச்சி நிலைகளைக் காட்டுவதாகும். இந்நிரலில் இரு பகுதிகள் உள்ளன. அவை அடைவு நிலை, அடைவு நிலை விவரிப்பு என்பனவாகும்.

**குறிப்பு நிரல்**

மாணவர்கள் உள்ளடக்கத் தரம், கற்றல் தரம் ஆகியவற்றை அடையும் வகையில் ஆசிரியர் பயன்பாட்டுக்கு நெறியும் பரிந்துரை நடவடிக்கைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்ட நெறி ஒவ்வொரு கற்றல் கற்பித்தலிலும் கட்டாயம் ஆசிரியர்களால் புகுத்தப்பட வேண்டிய நெறியாகும். இந்நிரலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் நெறியானது தொடக்கப்பள்ளிக்கான கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள பதினான்கு உலகநெறிகளில் ஒரு நெறியாகும்.

இந்நிரலில் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆசிரியர் தம் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை ஈர்க்கும் வகையிலும் விளைபயன் மிக்கதாகவும் உருவாக்கிக்கொள்ளத் துணைபுரிகின்றன. பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளடக்கத் தரம், கற்றல் தரம் ஆகியவற்றுக்கு ஏற்புடையதாக அமைய கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

மாணவர்களின் அறிவு, ஆற்றல், சுற்றுப்புறச்சூழல் ஆகியவற்றுக்கு ஏற்பப் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆசிரியர்கள் மாற்றியமைத்துக் கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர்.

# கருப்பொருள் : நானும் நாடும்

இக்கருப்பொருளானது மாணவர்கள் தாங்கள் வாழும் நாட்டுடனும் நாட்டு மக்களுடனும் உய்த்துணரக்கூடிய உலக நெறிகளை விவரிக்கிறது. உலக நெறிகளைக் கைவரப்பெறும் மாணவர் விதிமுறைகள், சட்டதிட்டங்கள், சமயம் அல்லது நம்பிக்கைகள், சமுதாய நெறி ஆகியவற்றின் அடிப்படையில் தன் நாட்டினருடன் விளைபயன்மிக்க நன்னெறிச்செயல்பாட்டையும் நடத்தையையும் சீர்தூக்கிப் பார்த்து அதன்படி இலங்குவர்.

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அடைவு நிலை | அடைவுநிலை விவரிப்பு | |
| **1.0 நாட்டின் வளப்பத்தை உருவாக்குவதில் இறை நம்பிக்கையைக் கொள்ளுதல்** | மாணவர்கள்:<br><br>1.1 இறை நம்பிக்கையின் பொருளை ருக்குன் நெகாரா கோட்பாட்டிற்கேற்ப விளக்குவர்.<br>1.2 நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை விவரிப்பர்.<br>1.3 நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையின் முக்கியத்துவத்தை விவரிப்பர்.<br>1.4 நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கை கொள்ளும்போது ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>1.5 நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையைச் செயல்படுத்துவர். | 1 | இறை நம்பிக்கையின் பொருளை ருக்குன் நெகாரா கோட்பாட்டிற்கேற்ப கூறுவர். | **நெறி:**<br>• இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்<br>**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:**<br>• மாணவர்கள் இறைவன் மீது நம்பிக்கை வைத்தல் எனும் கோட்பாட்டின் பொருளை பல்வேறு ஊடகங்களின் வழி தேடுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளைக் கருத்தூற்றுமுறைமையில் மேற்கொள்ளல்.<br>• நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கைச் செயல்களைப் போலித்தம் செய்தல். |
| | | 2 | நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை விவரிப்பர். | |
| | | 3 | நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கை கொள்வதையும் அதன் முக்கியத்துவத்தையும் தொடர்புப்படுத்துவர். | |
| | | 4 | நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கை கொள்ளும்போது ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். | |
| | | 5 | நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர். | |
| | | 6 | நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையைக் கொள்வதை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர். | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அடைவு நிலை | அடைவுநிலை விவரிப்பு | |
| **2.0 நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவு வழங்குதல்** | மாணவர்கள்:<br>2.1 நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவு வழங்குதலை எடுத்துக்காட்டுகளுடன் பட்டியலிடுவர்.<br>2.2 நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவு வழங்கும் பண்பாட்டினை வளர்ப்பதன் வழிமுறைகளை விவரிப்பர்.<br>2.3 நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவை வழங்குவதன் முக்கியத்துவத்தை விளக்குவர்.<br>2.4 நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவு வழங்கும் போது ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>2.5 நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவு வழங்கும் பண்பினைச் செயல்படுத்துவர். | 1 | நாட்டிற்காக வழங்கப்படும் உதவி மற்றும் தார்மீக ஆதரவை எடுத்துக்காட்டுகளுடன் கூறுவர். | **நெறி:**<br>• நன்மனம்<br>**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:**<br>• மாணவர்கள் ஆபத்து அவசர வேளை, நாட்டில் ஏற்படும் இயற்கை பேரிடர் சமயங்களில் வழங்கப்படும் உதவிகளையொட்டிய காணொலியைக் கண்டு மீட்டுணர்தல்.<br>• மாணவர்கள் நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவு தரும் வழிமுறைகளைக் கொண்ட சிற்றறிக்கையைத் தயாரித்தல்..<br>• மாணவர்கள் நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவு வழங்குவதன் முக்கியத்துவத்தையொட்டி தகவல் உலா நடவடிக்கை மேற்கொள்ளல்.<br>• மாணவர்கள் நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவு வழங்கும் செயல்களைப் பாகமேற்று நடித்தல். |
| | | 2 | நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவை வழங்கும் பண்பாட்டினை வளர்க்கும் வழிமுறைகளை விளக்குவர். | |
| | | 3 | நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவு வழங்கும் மனப்பான்மையையும் அதன் முக்கியத்துவத்தையும் தொடர்புப்படுத்துவர். | |
| | | 4 | நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவை வழங்கும்போது ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். | |
| | | 5 | நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவை வழங்கும் பண்பை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர். | |
| | | 6 | நாட்டிற்காக உதவி மற்றும் தார்மீக ஆதரவை வழங்கும் பண்பை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர். | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அடைவு நிலை | அடைவுநிலை விவரிப்பு | |
| **3.0**<br><br>**நாட்டின் குடிமகனின் கடமையுணர்வு** | மாணவர்கள்:<br><br>3.1 குடிமகன் என்பதன் பொருளைக் கூறுவர்.<br>3.2 குடிமகனாகத் தன் கடமையுணர்வைச் செயல்படுத்தக்கூடிய வழிமுறைகளை விவரிப்பர்.<br>3.3 குடிமகனாகத் தன் கடமையுணர்வைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளை விவரிப்பர்.<br>3.4 குடிமகனாகத் தன் கடமையுணர்வைச் செயல்படுத்தும்போது ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>3.5 குடிமகனாகத் தன் கடமையுணர்வைச் செயல்படுத்துவர். | 1 | குடிமகன் என்பதன் பொருளைக் கூறுவர். | **நெறி:**<br>• கடமையுணர்வு<br><br>**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:**<br>• மாணவர்கள் குடிமகன் என்பதன் பொருளைப் பல்வேறு ஊடகங்கள் வழி தேடிக் கருத்துரைத்தல்.<br>• மாணவர்கள் குடிமகனின் கடமைகளையொட்டிய அறிவோட்டவரை உருவாக்குதல்.<br>• மாணவர்கள் குடிமகனாகத் தன் கடமையுணர்வைப் புறக்கணிப்பதன் விளைவுகளைக் குழுவில் கலந்துரையாடுதல்.<br>• மாணவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பாகமேற்று நடித்தல். |
| | | 2 | குடிமகனாகத் தன் கடமையுணர்வைச் செயல்படுத்தக்கூடிய வழிமுறைகளை விளக்குவர். | |
| | | 3 | குடிமகனாகத் தன் கடமையுணர்வைப் புறக்கணிக்கும் மனப்பான்மையையும் அதன் விளைவுகளையும் தொடர்புப்படுத்துவர். | |
| | | 4 | குடிமகனாகத் தன் கடமையுணர்வைச் செயல்படுத்துவதால் ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். | |
| | | 5 | குடிமகனாகத் தன் கடமையுணர்வை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர். | |
| | | 6 | குடிமகனாகத் தன் கடமையுணர்வை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர். | |

<table>
<tr><th rowspan="2">உள்ளடக்கத் தரம்</th><th rowspan="2">கற்றல் தரம்</th><th colspan="2">தர அடைவு</th><th rowspan="2">குறிப்பு</th></tr>
<tr><th>அடைவு நிலை</th><th>அடைவுநிலை விவரிப்பு</th></tr>
<tr><td rowspan="6">4.0<br>நாட்டின் தனித்தன்மையைப் போற்றுதல்</td><td rowspan="6">மாணவர்கள்:<br><br>4.1 நாட்டின் தனித்தன்மைகளைப் பட்டியலிடுவர்.<br>4.2 நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் வழிமுறைகளை விளக்குவர்.<br>4.3 நாட்டின் தனித்தன்மையைப் போற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவர்.<br>4.4 நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் பண்பைச் செயல்படுத்துவதால் விளையும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>4.5 நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் பண்பினைச் செயல்படுத்துவர்.</td><td>1</td><td>நாட்டின் தனித்தன்மையைக் கூறுவர்.</td><td rowspan="6">நெறி:<br>• நன்றி நவில்தல்<br>பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:<br>• மாணவர்கள் நாட்டின் தனித்தன்மை தொடர்புடைய திரட்டேடு உருவாக்குதல்.<br>• மாணவர்கள் நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் வழிமுறைகளைத் தகவல் உலா நடவடிக்கையின் மூலம் மேற்கொள்ளல்.<br>• மாணவர்கள் நாட்டின் தனித்தன்மையைப் போற்றுதலின் முக்கியத்துவத்தைக் கவிதையாகப் படைத்தல்.<br>• மாணவர்கள் நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் வகையில் செயல் திட்டம் ஒன்றனை ஆக்கச்சிந்தனையோடு சுயமாக உருவாக்குதல்.</td></tr>
<tr><td>2</td><td>நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் வழிமுறைகளை விளக்குவர்.</td></tr>
<tr><td>3</td><td>நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் பண்பினையும் முக்கியத்துவத்தையும் தொடர்புப்படுத்துவர்.</td></tr>
<tr><td>4</td><td>நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் பண்பைச் செயல்படுத்துவதால் விளையும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர்.</td></tr>
<tr><td>5</td><td>நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் பண்பினை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர்.</td></tr>
<tr><td>6</td><td>நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் பண்பினை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர்.</td></tr>
</table>

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அடைவு நிலை | அடைவுநிலை விவரிப்பு | |
| **5.0**<br><br>**நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணம்** | மாணவர்கள்:<br><br>5.1 நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணச் செயல்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவர்.<br>5.2 நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தை வளர்க்கும் வழிமுறைகளை விளக்குவர்.<br>5.3 நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தின் முக்கியத்துவத்தை விவரிப்பர்.<br>5.4 நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>5.5 நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தைச் செயல்படுத்துவர். | 1 | நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணச் செயல்களை எடுத்துக்காட்டுகளுடன் கூறுவர். | **நெறி:**<br>• உயர்வெண்ணம்<br><br>**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:**<br>• நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணச் செயல்களின் எடுத்துக்காட்டுகளை ஒட்டிய திரட்டேடு தயாரித்துக் கருத்துரைத்தல்.<br>• நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தை வளர்க்கும் வழிமுறைகளைக் கலந்துரையாடுதல்.<br>• நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தின் முக்கியத்துவத்தையொட்டி பேச்சுப் போட்டி மேற்கொள்ளுதல்.<br>• மாணவர்கள் வெளிநாட்டு சுற்றுப்பயணிகளை வரவேற்கும் முறையை ஒட்டி காணொலித் துணுக்கு உருவாக்குதல். |
| | | 2 | நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தை வளர்க்கும் வழிமுறைகளை விளக்குவர். | |
| | | 3 | நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் தொடர்புப்படுத்துவர். | |
| | | 4 | நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். | |
| | | 5 | நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர். | |
| | | 6 | நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர்.. | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அடைவு நிலை | அடைவுநிலை விவரிப்பு | |
| **6.0 நாட்டின் அடையாளங்களை மதித்தல்** | மாணவர்கள்:<br><br>6.1 நாட்டின் அடையாளங்களை எடுத்துக்காட்டுகளுடன் கூறுவர்.<br>6.2 நாட்டின் அடையாளங்களை மதிக்கும் வழிமுறைகளை விவரிப்பர்.<br>6.3 நாட்டின் அடையாளங்களை மதிப்பதன் முக்கியத்துவத்தைப் பகுத்தறிவர்.<br>6.4 நாட்டின் அடையாளங்களை மதிக்கையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>6.5 நாட்டின் அடையாளங்களை மதிப்பர். | 1 | நாட்டின் அடையாளங்ளை எடுத்துக்காட்டுகளுடன் கூறுவர். | **நெறி:**<br>• மரியாதை<br><br>**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:**<br>• மாணவர்கள் நாட்டின் அடையாளங்களை வலைத்தளம் வழி தேடுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் அடையாளங்களை மதிக்கும் வழிமுறைகளைச் சிந்தனை வரையில் உருவாக்குதல்.<br>• மாணவர்கள் நாட்டின் அடையாளங்களை மதிப்பதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் அடையாளங்களை மதிக்கும் செயல்களையொட்டிய தங்களின் சுய அனுபவங்களைப் பகிர்தல். |
| | | 2 | நாட்டின் அடையாளங்களை மதிக்கும் வழிமுறைகளை விளக்குவர். | |
| | | 3 | நாட்டின் அடையாளங்களை மதிக்கும் பண்பினையும் அதன் முக்கியத்துவத்தையும் தொடர்புப்படுத்துவர். | |
| | | 4 | நாட்டின் அடையாளங்களை மதிக்கையில் ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். | |
| | | 5 | நாட்டின் அடையாளங்களை மதிக்கும் பண்பினை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்துவர். | |
| | | 6 | நாட்டின் அடையாளங்களை மதிக்கும் பண்பினை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர். | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அடைவு நிலை | அடைவுநிலை விவரிப்பு | |
| **7.0<br>நாட்டின் மீது அன்புடைமை** | மாணவர்கள்:<br>7.1 நாட்டின் மீது அன்பு செலுத்தும் செயல்களை எடுத்துக்காட்டுகளுடன் பட்டியலிடுவர்.<br>7.2 நாட்டின் மீது அன்பை வளர்க்கும் வழிமுறைகளை விவரிப்பர்.<br>7.3 நாட்டின் மீதான அன்பைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளைத் தொகுப்பர்.<br>7.4 நாட்டின் மீது அன்பு செலுத்தும் போது ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>7.5 நாட்டின் மீது அன்பைச் செலுத்துவர். | 1 | நாட்டின் மீது அன்பு செலுத்தும் செயல்களை எடுத்துக்காட்டுகளுடன் கூறுவர். | **நெறி:**<br>• அன்புடைமை<br>**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:**<br>• மாணவர்கள் நாட்டின் மீது அன்புடைமை தொடர்பான காணொலித் துணுக்கு ஒன்றைக் காணுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் மீது அன்பு செலுத்தும் வழிமுறைகள் கொண்ட சுவரொட்டியைத் தயாரித்தல்.<br>• மாணவர்கள் நாட்டின் மீதான அன்பைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளைக் கட்டுரையாக எழுதுதல்.<br>• மாணவர்கள் தேசியக் கொடியைப் பல்வேறு பொருட்களைக் கொண்டு புத்தாக்க முறையில் உருவாக்குதல். |
| | | 2 | நாட்டின் மீது அன்பை வளர்க்கும் வழிமுறைகளை விளக்குவர். | |
| | | 3 | நாட்டின் மீதான அன்பைப் புறக்கணிக்கும் மனப்பான்மையையும் அதன் விளைவுகளையும் தொடர்புப்படுத்துவர். | |
| | | 4 | நாட்டின் மீது அன்பு செலுத்தும்போது ஏற்படும் மன உணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். | |
| | | 5 | நாட்டின் மீது அன்பு செலுத்தும் பண்பை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர். | |
| | | 6 | நாட்டின் மீது அன்பு செலுத்தும் பண்பை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர். | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அடைவு நிலை | அடைவுநிலை விவரிப்பு | |
| 8.0<br>**நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமை** | மாணவர்கள்:<br><br>8.1 நாட்டில் நீதியுடைமையை நிலைநாட்டும் அமைப்புகளைப் பட்டியலிடுவர்.<br>8.2 நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமையைச் செயல்படுத்தும் வழிமுறைகளை விவரிப்பர்.<br>8.3 நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமையின் முக்கியத்துவத்தை விளக்குவர்.<br>8.4 நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமையைச் செயல்படுத்துகையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>8.5 நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமை பண்பைச் செயல்படுத்துவர். | 1 | நாட்டில் நீதியுடைமையை நிலைநாட்டும் அமைப்புகளைக் கூறுவர். | **நெறி:**<br>• நடுவுநிலைமை<br>**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:**<br>• நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமையை நிலைநிறுத்தும் அமைப்புகள் பற்றிய தகவல்களைப் பல்வேறு ஊடகங்களின் வழி படைத்தல்.<br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமைப் பண்பினைக் கடைப்பிடிக்கும் வழிமுறைகளைப் போலித்தம் செய்தல்..<br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமைப் பண்பினைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை விளக்கும் அட்டைகளைச் செய்து அதனை அலங்காரச் செடியில் மாட்டுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்கான நீதியை நிலைநாட்டும் அமைப்புகளுக்குப் பயணம் மேற்கொள்ளல். (காவல் நிலையம், நீதி மன்றம், ஊழல் தடுப்பு ஆணையம்). |
| | | 2 | நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமையைச் செயல்படுத்தும் வழிமுறைகளை விளக்குவர். | |
| | | 3 | நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமைப் பண்பையும் அதன் முக்கியத்துவத்தையும் தொடர்புப்படுத்துவர். | |
| | | 4 | நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமையைச் செயல்படுத்துகையில் ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். | |
| | | 5 | நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமை பண்பினை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர். | |
| | | 6 | நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமை பண்பினை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்;<br>எடுத்துக்காட்டாகத் திகழ்வர். | |

<table>
<tr><th rowspan="2">உள்ளடக்கத் தரம்</th><th rowspan="2">கற்றல் தரம்</th><th colspan="2">தர அடைவு</th><th rowspan="2">குறிப்பு</th></tr>
<tr><th>அடைவு நிலை</th><th>அடைவுநிலை விவரிப்பு</th></tr>
<tr><td rowspan="6">9.0<br>நாட்டின் தன்மானத்தைக் காப்பதில் துணிவு</td><td rowspan="6">மாணவர்கள்:<br>9.1 நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களைப் பட்டியலிடுவர்.<br>9.2 நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களின் முக்கியத்துவத்தை விவரிப்பர்.<br>9.3 நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளைத் தொகுப்பர்.<br>9.4 நாட்டின் தன்மானத்தைக் காக்கத் துணிவாகச் செயல்படுகையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>9.5 நாட்டின் தன்மானத்தைக் காப்பதற்குத் துணிவு பண்பினைச் செயல்படுத்துவர்.</td><td>1</td><td>நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களைப் பட்டியலிடுவர்.</td><td rowspan="6">நெறி:<br>• துணிவு<br>பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:<br>• மாணவர்கள் நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களையொட்டி நண்பர்களுடன் கலந்துரையாடுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் தன்மானத்தைத் துணிவுடன் காப்பதன் முக்கியத்துவத்தைத் தொகுத்து எழுதுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளை அனுமானித்துப் படைத்தல்.<br>• நம் நாடு கையூட்டை ஒழிப்பதில் முறையாகச் செயல்படவில்லை எனும் வெளிநாட்டு நண்பனின் கூற்றுக்கு மின்னஞ்சல் மூலம் துணிவுடன் நாட்டைத் தற்காத்துப் பதிலளித்தல்.</td></tr>
<tr><td>2</td><td>நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களின் முக்கியத்துவத்தை விளக்குவர்.</td></tr>
<tr><td>3</td><td>நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களையும் அதனைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளையும் தொடர்புப்படுத்துவர்.</td></tr>
<tr><td>4</td><td>நாட்டின் தன்மானத்தைக் காக்கத் துணிவாகச் செயல்படுகையில் ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர்.</td></tr>
<tr><td>5</td><td>நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவு பண்பினை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர்.</td></tr>
<tr><td>6</td><td>நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவு பண்பினை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர்.</td></tr>
</table>

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அடைவு நிலை | அடைவுநிலை விவரிப்பு | |
| **10.0**<br><br>**நாட்டின் வளப்பத்திற்கு நேர்மை** | மாணவர்கள்:<br><br>10.1 நாட்டின் வளப்பத்திற்குத் தேவையான நேர்மை செயல்களைப் பட்டியலிடுவர்.<br>10.2 நாட்டின் வளப்பத்திற்காக நேர்மை பண்பினைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை விவரிப்பர்.<br>10.3 நாட்டின் வளப்பத்திற்காக நேர்மை பண்பினைப் புறக்கணிப்பதனால் ஏற்படும் விளைவுகளைத் தொகுப்பர்.<br>10.4 நாட்டின் வளப்பத்திற்காக நேர்மையாகச் செயல்படுகையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>10.5 நாட்டின் வளப்பத்திற்காக நேர்மை பண்பைச் செயல்படுத்துவர். | 1 | நாட்டின் வளப்பத்திற்குத் தேவையான நேர்மை செயல்களைக் கூறுவர். | **நெறி:**<br><br>• நேர்மை<br><br>**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:**<br><br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்குத் தேவையான நேர்மை செயல்களையொட்டி கருத்தூற்று முறைமை நடவடிக்கை மேற்கொள்ளல்.<br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்காக நேர்மை பண்பினைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தைக் கொண்ட மனவோட்ட வரையைத் தயாரித்தல்.<br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்காக நேர்மை பண்பினைப் புறக்கணிப்பதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிய உரை நிகழ்த்துதல்.<br>• மாணவர்கள் சூழல் அட்டையில் காணப்படும் நாட்டின் வளப்பத்திற்குத் தேவையான நேர்மை செயல்களை நடித்துக் காட்டுதல். |
| | | 2 | நாட்டின் வளப்பத்திற்காக நேர்மை பண்பினைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவர். | |
| | | 3 | நாட்டின் வளப்பத்திற்காக நேர்மை பண்பினையும் அதனைப் புறக்கணிப்பதனால் ஏற்படும் விளைவுகளையும் தொடர்புப்படுத்துவர். | |
| | | 4 | நாட்டின் வளப்பத்திற்காக நேர்மையாகச் செயல்படுகையில் ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். | |
| | | 5 | நாட்டின் வளப்பத்திற்காக நேர்மை பண்பை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர். | |
| | | 6 | நாட்டின் வளப்பத்திற்காக நேர்மை பண்பை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர். | |

<table>
<tr><th rowspan="2">உள்ளடக்கத் தரம்</th><th rowspan="2">கற்றல் தரம்</th><th colspan="2">தர அடைவு</th><th rowspan="2">குறிப்பு</th></tr>
<tr><th>அடைவு நிலை</th><th>அடைவுநிலை விவரிப்பு</th></tr>
<tr><td rowspan="6">11.0<br>நாட்டின் வளர்ச்சிக்கு ஊக்கமுடைமை</td><td rowspan="6">மாணவர்கள்:<br>11.1 நாட்டின் நற்பெயரைப் பல்வேறு துறைகளில் மேலோங்கச் செய்த முன்னுதாரண நபர்களைப் பட்டியலிடுவர்.<br>11.2 நாட்டின் வளர்ச்சிக்கான ஊக்கமுடைமை செயல்களை விவரிப்பர்.<br>11.3 நாட்டின் வளர்ச்சிக்கான ஊக்கமுடைமை பண்பின் முக்கியத்துவத்தை அடையாளங்காண்பர்.<br>11.4 நாட்டின் வளர்ச்சிக்காக ஊக்கமுடைமையுடன் செயல்படுகையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>11.5 நாட்டின் வளர்ச்சிக்காக ஊக்கமுடைமை பண்பினைச் செயல்படுத்துவர்.</td><td>1</td><td>நாட்டின் நற்பெயரைப் பல்வேறு துறைகளில் மேலோங்கச் செய்த முன்னுதாரண நபர்களைக் கூறுவர்.</td><td rowspan="6">நெறி:<br>• ஊக்கமுடைமை<br>பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:<br>• மாணவர்கள் நாட்டின் நற்பெயரைப் பல்வேறு துறைகளில் மேலோங்கச் செய்த முன்னுதாரண நபர்கள் தொடர்புடைய படவில்லை காட்சியைத் தயாரித்தல்.<br>• மாணவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கான ஊக்கமுடைமை செயல்களையொட்டி தகவல் உலா மேற்கொள்ளுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கான ஊக்கமுடைமை பண்பின் முக்கியத்துவத்தை அறிவோட்டவரையில் காட்டுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் நற்பெயரைப் பல்வேறு துறைகளில் மேலோங்கச் செய்த முன்னுதாரண நபர்களில் ஒருவரைப் போன்று பாகமேற்று நடித்தல்.</td></tr>
<tr><td>2</td><td>நாட்டின் வளர்ச்சிக்கான ஊக்கமுடைமை செயல்களை விளக்குவர்.</td></tr>
<tr><td>3</td><td>நாட்டின் வளர்ச்சிக்கான ஊக்கமுடைமை செயல்களையும் அதன் முக்கியத்துவத்தையும் தொடர்புப்படுத்துவர்.</td></tr>
<tr><td>4</td><td>நாட்டின் வளர்ச்சிக்காக ஊக்கமுடைமையுடன் செயல்படுகையில் ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர்.</td></tr>
<tr><td>5</td><td>நாட்டின் வளர்ச்சிக்காக ஊக்கமுடைமை பண்பினை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர்.</td></tr>
<tr><td>6</td><td>நாட்டின் வளர்ச்சிக்காக ஊக்கமுடைமை பண்பினை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர்.</td></tr>
</table>

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அடைவு நிலை | அடைவுநிலை விவரிப்பு | |
| **12.0 நாட்டின் சுபீட்சத்திற்கு ஒத்துழைப்பு** | மாணவர்கள்:<br><br>12.1 நாட்டின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பின் எடுத்துக்காட்டுகளை விளக்குவர்.<br>12.2 நாட்டின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பினை வளர்க்கும் முறைகளை விவரிப்பர்.<br>12.3 நாட்டின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பின் முக்கியத்துவத்தை விவரிப்பர்.<br>12.4 நாட்டின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>12.5 நாட்டின் சுபீட்சத்திற்காக ஒத்துழைப்புப் பண்பினைச் செயல்படுத்துவர். | 1 | நாட்டின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பின் எடுத்துக்காட்டுகளைக் கூறுவர். | **நெறி:**<br>• ஒத்துழைப்பு<br>**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:**<br>• மாணவர்கள் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பின் எடுத்துக்காட்டுகளைச் சிந்தனைவரையில் உருவாக்குதல்.<br>• மாணவர்கள் நாட்டின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பின் செயல்களையொட்டி சிற்றறிக்கை உருவாக்குதல்.<br>• மாணவர்கள் நாட்டின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பின் முக்கியத்துவத்தையொட்டிய துணுக்குகளைத் தகவல் ஊடகங்களின் மூலம் தேடுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பினையொட்டிய தங்கள் அனுபவங்களைப் பகிர்தல். |
| | | 2 | நாட்டின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பினை வளர்க்கும் முறைகளை விளக்குவர். | |
| | | 3 | நாட்டின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பையும் அதன் முக்கியத்துவத்தையும் தொடர்புப்படுத்துவர். | |
| | | 4 | நாட்டின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். | |
| | | 5 | நாட்டின் சுபீட்சத்திற்காக ஒத்துழைப்புப் பண்பினை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர். | |
| | | 6 | நாட்டின் சுபீட்சத்திற்காக ஒத்துழைப்புப் பண்பினை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர். | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அடைவு நிலை | அடைவுநிலை விவரிப்பு | |
| **13.0 நாட்டின் வளப்பத்திற்கு மிதமான பண்பு** | மாணவர்கள்:<br><br>13.1 நாட்டின் வளப்பத்திற்கான மிதமான செயல்களைப் பட்டியலிடுவர்.<br>13.2 நாட்டின் வளப்பத்திற்கான மிதமான பண்பின் முக்கியத்துவத்தை விவரிப்பர்.<br>13.3 நாட்டின் வளப்பத்திற்கான மிதமான பண்பினைப் புறக்கணிப்பதன் விளைவுகளைத் தொகுப்பர்.<br>13.4 நாட்டின் வளப்பத்திற்கான மிதமான பண்பினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>13.5 நாட்டின் வளப்பத்திற்கான மிதமான பண்பைச் செயல்படுத்துவர். | 1 | நாட்டின் வளப்பத்திற்கான மிதமான செயல்களைக் கூறுவர். | **நெறி:**<br>• மிதமான மனப்பான்மை<br>**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:**<br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்கான மிதமான செயல்களையொட்டிய தகவல்களைப் பல்வேறு மூலங்களின் வழி தேடுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்கான மிதமான செயல்களின் முக்கியத்துவத்தைக் கருத்தூற்று முறைமை வழி மேற்கொள்ளல்.<br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்கான மிதமான செயல்களைப் புறக்கணிப்பதையொட்டி அறிவோட்டவரையை உருவாக்குதல்.<br>• மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்கான மிதமான செயல்கள் தொடர்புடைய பொன்மொழிகளைப் பல்வேறு ஊடகங்கள் கொண்டு தயாரித்தல். |
| | | 2 | நாட்டின் வளப்பத்திற்கான மிதமான பண்பின் முக்கியத்துவத்தை விளக்குவர். | |
| | | 3 | நாட்டின் வளப்பத்திற்கான மிதமான பண்பைப் புறக்கணிப்பதையும் அதன் விளைவுகளையும் தொடர்புப்படுத்துவர். | |
| | | 4 | நாட்டின் வளப்பத்திற்கான மிதமான பண்பினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். | |
| | | 5 | நாட்டின் வளப்பத்திற்கான மிதமான பண்பை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர். | |
| | | 6 | நாட்டின் வளப்பத்திற்கான மிதமான பண்பை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர். | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அடைவு நிலை | அடைவுநிலை விவரிப்பு | |
| **14.0**<br><br>**நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்தல்** | மாணவர்கள்:<br><br>14.1 நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் செயல்களை எடுத்துக்காட்டுகளுடன் கூறுவர்.<br>14.2 நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பின் முக்கியத்துவத்தை விவரிப்பர்.<br>14.3 நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பினைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளைத் தொகுப்பர்.<br>14.4 நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துவர்.<br>14.5 நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பைச் செயல்படுத்துவர். | 1 | நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் செயல்களைக் கூறுவர். | **நெறி:**<br>• விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை<br><br>**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:**<br>• மாணவர்கள் நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் செயல்கள் தொடர்பான படத்துணடுகளைப் பல்வேறு ஊடகங்களின் வழி சேகரித்தல்.<br>• மாணவர்கள் நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பின் முக்கியத்துவம் தொடர்பான கவிதையை இயற்றுதல்.<br>• மாணவர்கள் நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பினைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளையொட்டி உரையாற்றுதல்.<br>• மாணவர்கள் சூழல் அட்டையிலுள்ள நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் செயல்களை நடித்துக் காட்டுதல். |
| | | 2 | நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பின் முக்கியத்துவத்தை விளக்குவர். | |
| | | 3 | நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பினைப் புறக்கணிப்பதையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் தொடர்புப்படுத்துவர். | |
| | | 4 | நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவர். | |
| | | 5 | நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்துவர். | |
| | | 6 | நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பை உய்த்துணர்ந்து நிலையாய்ச் செயல்படுத்துவர்; எடுத்துக்காட்டாகத் திகழ்வர். | |

| PANEL PENGGUBAL | | |
|---|---|---|
| **Nama Panel** | | **Alamat Berkhidmat Panel** |
| 1. | Than Chew Keok | Bahagian Pembangunan Kurikulum, Putrajaya |
| 2. | Azmarina binti Abdul Samad | Bahagian Pembangunan Kurikulum, Putrajaya |
| 3. | Leong Hooi Li | Bahagian Pembangunan Kurikulum, Putrajaya |
| 4. | Velusamy a/l Kuppusamy | Bahagian Pembangunan Kurikulum, Putrajaya |
| 5. | Vijayaletcmy a/p Muniyandy | IPGM Kampus Bahasa Melayu, Lembah Pantai, Kuala Lumpur |
| 6. | Haryati binti Husin | SK Seksyen 7, Bandar Baru Bangi, Selangor |
| 7. | Moshaizaimatun binti Mohamed Yunus | SK Bukit Naga, Kampung Bukit Naga, Selangor |
| 8. | Najhan bin Mat Akhir | SK Kg. Jawa 2, Klang, Selangor |
| 9. | Wang Lock Hui | SK Hulu Klang, Ampang, Selangor |
| 10. | Vaijayanthimala a/p Velautham | SJKT Serdang, Selangor |
| 11. | Chitra Subashini a/p Gunasekaram | SJKT Puchong Batu 14, Selangor |
| 12. | D Tanasegar a/l Dharmalingam | SJKT Telok Panglima Garang, Selangor |
| 13. | Sing Bee Khim | SJKC Foon Yew 4, Johor Bharu |
| 14. | Bhuvaneswary a/p Krishnan | SJKT West Country (Timur), Kajang, Selangor |
| 15. | Vatsala a/p Gopal | SJKT Kg Pandan, Kuala Lumpur |
| **TURUT MENYUMBANG** | | |
| 1. | J. Krishna Kumary a/p Juval | IPGM Kampus Bahasa Melayu, Lembah Pantai, Kuala Lumpur |
| 2. | Badriyatun binti Kamar | IPGM Kampus  Pendidikan Teknik, Nilai, Negeri Sembilan |
| 3. | Vinod Kumar a/l Ramakrishnan | SJKT Ladang Pertang, Bahau, Negeri Sembilan. |
| 4. | Dr. Noor Banu binti Mahadir | UPSI, Tanjung Malim, Perak |

## PENGHARGAAN

### Penasihat

| | |
|---|---|
| Haji Azman bin Haji Adnan | Pengarah |
| Dr. Latip bin Muhammad | Timbalan Pengarah Kanan<br>(Kluster Dasar dan Sains & Teknologi) |

### Penasihat Editorial

| | |
|---|---|
| Nooraini binti Kamaruddin | Timbalan Pengarah |
| Faridah binti Mohemad Zain | Timbalan Pengarah |
| Dr. Kashry bin Ab. Rani | Timbalan Pengarah |
| Mohamed Salim bin Taufix Rashidi | Timbalan Pengarah |
| Fazlinah binti Said | Timbalan Pengarah |
| Hajah Norashikin binti Hashim | Timbalan Pengarah |

# PENGHARGAAN

## Penasihat (April 2019)

| | | |
|---|---|---|
| Dr. Mohamed bin Abu Bakar | - | Pengarah |
| Datin Dr. Ng Soo Boon | - | Timbalan Pengarah<br>(Dasar dan Sains & Teknologi) |

## Penasihat Editorial (April 2019)

| | | |
|---|---|---|
| Mohamed Zaki bin Abd. Ghani | - | Ketua Sektor |
| Haji Naza Idris bin Saadon | - | Ketua Sektor |
| Mahyudin bin Ahmad | - | Ketua Sektor |
| Dr. Rusilawati binti Othman | - | Ketua Sektor |
| Mohd Faudzan bin Hamzah | - | Ketua Sektor |
| Fazlinah binti Said | - | Ketua Sektor |
| Mohamed Salim bin Taufix Rashidi | - | Ketua Sektor |
| Haji Sofian Azmi bin Tajul Arus | - | Ketua Sektor |
| Paizah binti Zakaria | - | Ketua Sektor |
| Hajah Norashikin binti Hashim | - | Ketua Sektor |

**Penyelaras Teknikal Penerbitan dan Spesifikasi**

Isnazhana binti Ismail
Mior Syazril bin Mohamed Sapawi
Siti Zulikha binti Zelkepli

**Penyelaras Teknikal Penerbitan dan Spesifikasi (2019)**

Saripah Faridah binti Syed Khalid
Nur Fadia binti Mohamed Radzuan
Mohamad Zaiful bin Zainal Abidin
Siti Zulikha binti Zelkepli

ISBN 978-967-420-645-1
9 7 8 9 6 7 4 2 0 6 4 5 1

**Bahagian Pembangunan Kurikulum**
**Kementerian Pendidikan Malaysia**
Aras 4, 6-8 Blok E9, Kompleks Kerajaan Parcel E,
62604 Putrajaya.
Tel: 03-8884 2000 Fax: 03-8888 9917
http://bpk.moe.gov.my